தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. வெளிநாடு மூன்றணு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 3 | சென்னை | 13—10—56 | சனிக்கிழமை | இதழ் 7



"வேலையில்லாக் கொடுமையால் தற்கொலை".

"கடன் தொல்லை தாளாமல் தற்கொலை".

"தாளாத வறுமையால் ஒரு குடும்பமே தற்கொலை".

"வாழ்க்கையில் வெறுப்புற்ற வாலிபன் தற்கொலை".

"பரீட்சையில் தேருததால் மாணவன் தற்கொலை".

'காதலர்கள் மணக்கோலத்தில் தற்கொலை".

—தற்கொலை! தற்கொலை! மனிதனின் கோழை மனசு சாவைச் செயற்கையாக்கி விட்டது. நாளுக்குநாள் தற்கொலைகள் அதிகரிக்கின்றன. ஊர்ந்து செல்லும் வாழ்க்கையில் ஒரு தடை ஏற்பட்டாலும் மனம், நேரே தற்கொலையைத் தான் சந்திக்கிறது, சிலருக்கு. "இந்த வாழ்வுக்கு சாவு மேல்" என்ற பல்லவி ஈனக் குரலில் வெளிவருகிறது. தலை சுற்றுகிறது; மயக்கம் வருவதுபோல் தோன்றுகிறது; உடலம் வியர்க்கிறது. உணர்ச்சியின் பல்வேறு நாடி நரம்புகள் ஒய்ந்து போகின்றன. ஒரே சிந்தனை! தற்கொலை!

உலகத்திலேயே "மகத்தான கோழை" எவனென்றால், தற்கொலை செய்துகொள்ள நினைப்பவன்தான்! அவன் உலகத்து வாழ்வுக்கே ஒருவழிதான் இருப்பதாக நினைக்கிறன். அதனுல் அந்த வழி அடைபட்டுவிட்டது போல் தோன்றியதும் தற்கொலைக்குத் துணிகிறன். மறுநாளே உலகம் இருண்டிருப்பதாகவும், தான் வாழ்வதால் துயர்தான் அதிகமென்றும் முடிந்த முடிவாகத் தனக்குத் தானே ஒரு கணக்குப் போட்டுக் கொள்வதால்தான், மனிதனது கோழைத்தனம், தற்கொலை வரை வியாபிக்கிறது. அடுத்து வருவது அதுபோன்றே இருப்பதில்லை என்பதை அவன் உணருவதில்லை.

சொல்லப் போனுல், தொல்லைப்படுகிற ஒவ்வொருவனும் தான் மட்டுமே அந்தத் தொல்லையை அனுபவிப்பதாக நினைக்கிறன். அதனுல்தான் "இருந்தென்ன, போயென்ன" மனே பாவம் ஏற்படுகிறது.

உலகம் தொல்லைகளின் கூடாரம்.

மனிதனுக்கு, அதிலிருந்து தப்பவேண்டிய கடமை இருக்கிறது.

எல்லா மனிதனுக்கும்!—ஆம்; அது யாரையும் விடுவதில்லை.

ஆரம்ப முதலே தொல்லைகள் ஏற்படாமல் ஒதுக்கிக்கொண்டு வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்பவர்கள் தான், கவலையற்ற மனிதர்களாக வாழ்கிறர்கள். பின்பு வரும் தொல்லைகளைத் திட மனதுகொண்டு சமாளிக்க வேண்டும். முக்கியமாக, **எதையும் சாதாரணமாகக் கருதும் மனப்பக்குவம் வேண்டும்.**

"மனசுதான் காரணம்" என்பார்கள் கிராமங்களில். எதற்குமே மனம்தான் காரணம். தொல்லைகளின் அளவையும் நிலையையும் மனம் தான் கணக்கிடுகிறது. சிறியவற்றைப் பெரிதாக்குவதே மனம் என்னும் பூதக்கண்ணுடிதான். மனதைத் திருப்பிப் பிடித்தால் பெரியன யாவும் சிறியனவாகத் தோன்றுகின்றன.

நாம் கொடுக்கும் முக்கியத்துவத்தில்தான் ஒன்றின் பரிமாணம் அடங்கிக் கிடக்கிறது. நாம் "ஐயோ!" என்றுல், ஐயோ தான்! நாம் "கிடக்கிறது!" என்றுல், கிடக்கிறதுதான்! பஞ்சு பாரமாவதும், பாரம் பஞ்சாவதும் நெஞ்சத்தின் அளவில்தான். ஞானிகளைக் 'கடந்தவர்கள்' என்று சொல்வது இதனுல்தான். அவர்கள் இதயங் கடந்தவர்கள்; எண்ணங்கள், தங்களை அடக்கியாள விடாமல், தாங்கள் எண்ணங்களை அடக்கியாள்பவர்கள்! (நான் சொல்வது உண்மை ஞானிகளை!) மனக்குரங்கு மனிதனைப் பிய்த்துப் போடவிடக்கூடாது. தோல்வியில் அதிர்ச்சி ஏற்படக்கூடாது. தலை, பாரமாகத் தோன்றும்படி சிந்திக்கக் கூடாது. சிந்தித்தால் நெஞ்சு வெடித்துவிடும் போல் தோன்றும் சில காரியங்களை, வாழ்க்கைக் கோட்டிலிருந்து வெகு தூரத்திற்கு அப்புறப்படுத்தி விட வேண்டும்.

"**போனுல் மயிர்போச்சு. போ!**" என்றுனே இரட்டையரில் ஒருவன், அவனது துணிவு வேண்டும். முதல் தேதிக் காரியம், இரண்டாந் தேதிக் கடமையைத் தடைப் படுத்தும்படி விடக்கூடாது.

"சென்றதினி மீளாது" என்று முடிவுகட்டி, 'சென்றதையே சிந்தை செய்து கொன்றழிக்கும் குழியில் வீழ்ந்து குமையாமல், இன்று புதிதாய்ப் பிறந்தோம் என எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு தின்று விளையாடி" இன்புறுதல் வேண்டும்.

அச்சம் பயங்கரமான எதிரி; அதுதான் தற்கொலையின் தாய். சாவைத் துச்சமாக மதிக்கும் துணிவு கொண்டால், வாழ்க்கை இனிக்கும். "காலா உனை சிறு புல்லென மதிக்கிறேன்; என் காலருகே வாடா! சற்றே மிதிக்கிறேன்" என்றுன், பாரதி. எல்லோரையும் தன் வசப்படுத்தும் சாவினை, கவிஞன் காலால் மிதிக்கப் பார்க்கிறன். தன்னை அறிந்ததால் கவிஞனுக்குத் திமிர்! சாவு அவனுக்குத் து... சம்! தொல்லை அவனுக்குத் தூசு! 'ப்பூ! இதுதானே!" என்ற எக்காளம்! "சனியனைத் தன்ளு!" என்ற அலட்சியம்! கால்கள் துடித்து நடக்கின்றன; நெஞ்சம் துள்ளுகிறது; முகத்திலே வெற்றியின் வெளிச்சம்; கூனிய உடலிலும் குறையா அழகு! ஏன்? அவன் உலகத்தைப் பந்தாக நினைத்துவிட்டான்; காலால் உதைக்கிறன்; கையால் பிடித்து எறிகிறன். "பாரடா அந்தப் பாவி மகனை, நேற்று முதல் முகத்தை 'உம்' மென்று வைத்துக் கொண்டிருக்கிறன். மடப்பயல்! முகம் சுருங்கினுல் பிரச்சினை தீருமா? 'பட்டினி கிடப்பதால் மன பாரங் குறையுமா? டேய் ராசா நிமிர்ந்து நடடா! ஏண்டா, 'நம் போல் வளைகிறய்?"—இப்படி பாரதி பேசுகிறன். அவன் முழு சாகச் சிரிக்கிறன். உண்மையி அதுதான் சிரிப்பு. வேண்டா வர்களை வரவேற்க வேண்டி நிர்ப்பந்தம் ஏற்படும்போது மனி தன் சிரிக்கிறனே, அது சிரிப் பல்ல; பிணத்தின் கோணி இதழிலே தோன்றும் "சிரிப் மாதிரி!"

மனந் திறந்து பேசு! சிரி பயப்படாதே!

"நான்!"-அனுபவமும் அறி மில்லாதவர்களுக்கு இ வார்த்தை அகங்காரம். பா

— 12-ம் பக்

பிரிவினை அல்ல; மீட்பு வேலை!

தெளிவாகத் தெரியும் ஒரு உண்மையைச் சிக்கலாக்கி அதை தகராறுக்குரிய பிரச்சினையாக்குவதில் காங்கிரஸ் தலைவர்கள் கை தேர்ந்தவர்களென்பதை அவர்களது ஒன்பதாண்டு கால 'அரசியல் குடித்தனம்' நமக்கு நன்கு விளக்கி வருகிறது. எந்த உண்மையையும் எளிதில் ஒப்புக்கொண்டு விட்டால் எங்கே கவுரவம் செத்துவிடுமோ, அந்தஸ்து அழிந்துவிடுமோ என்று எண்ணிடும் 'கொள்கை'யுடையவர்களாக மாறிவிட்டிருக்கிறார்கள்.

கழகம் தண்ணீர் என்றுசொல்வதை காங்கிரஸ் நம்புகிறது.

கழகம் சந்தனம் என்று மெய்ப்பிப்பதைக் காங்கிரஸ் ஒப்புக்கொள்கிறது.

நிலவானை ஏற்றுக் கொள்கிறது; காங்கிரஸ் நிலவையும் ஏற்றுக் கொள்கிறது. ஆனால் தனித் தென்னாடு என்றால் மட்டும் அடிவயிற்றில் நெருப்புப்பற்றிக் கொண்டது போலப் பேசுகிறார்கள். "நேருவின் உறவு என்னாவது? நேசபாசம் என்னாவது? காந்தி நாடு என்று பெயர் வைக்கவேண்டிய தேசத்திலா எல்லைக் கோட்டை அழித்துக் கிழிப்பது!" என்று ஆலாபனம் செய்யத் தொடங்கி விடுகிறார்கள். அவர்களது உள்ளம் நமக்குப் புரிகிறது. நமது உண்மையும் அவர்களுக்குப் புரிகிறது. ஆனால் ஏற்றுக்கொள்ள மறுத்து விடுகிறார்கள். அதற்கு ஏதாவது காரணங்கள் உண்டா? பல ஆண்டுகளாகக் கஷ்டப்பட்டு வெள்ளையரிடமிருந்து பெற்ற சுதந்திரத்தை எளிதில் இவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்து விடுவதா என்ற ஆத்திரம் ஒரு சிலருக்கு; தென்னாடு திராவிட இயக்கத்தார் கைக்குப் போய் விட்டால் காங்கிரஸ் கதி என்னாகுமோ என்ற தவறான கணக்கு வேறு சிலருக்கு; எஞ்சியவர்களுக்கு, ஏதாவது 'புத்திசாலி'த்தனமான காரணத்தைச் சொல்லி 'திராவிட நாடு'ப் பிரச்சினையை தலைதூக்க முடியாமற் செய்துவிடலாம் என்ற எண்ணம்.

திராவிட நாடு பிரிந்துவிட்டால்—டெல்லி நமக்கு அண்டை வீடு—நண்பர் வீடு என்ற அளவுக்கு மாறிவிட்டால் தமிழ்நாட்டுக் காங்கிரசாருக்கு என்ன இழுக்கு, ஆபத்து நேர்ந்து விடும் என்று பயப்படுகிறார்களோ தெரியவில்லை. டில்லி நமக்கு வேண்டாமென்றால், தமிழ்நாட்டை திராவிட இயக்கத்தார் கைப்பற்ற நினைக்கிறார்கள் என்று எண்ணிவிடுகிறார்கள். தென்னாட்டுக்குச் சுதந்திரம் வேண்டும் என்றால் நாம் நாட்டைக் கட்டியாள நினைக்கிறோம் என்று சில காங்கிரஸ்காரர்கள் நினைப்பதில் அர்த்தமில்லாமலில்லை. வெள்ளையனே வெளியேறு—என்று மற்றவர்களோடு சேர்ந்து காங்கிரஸ்காரர்கள் சொன்னபோது என்ன நினைத்துக்கொண்டு சொன்னார்கள்? காந்தி என்ற மூலவிக்ரகம் நம்மிடந்தானிருக்கிறது; ஆகவே வெள்ளையன் போய்விட்டால் ஆளும் பொறுப்பு நமக்குத்தான் கிடைக்கும் என்ற சபலத்தில் காங்கிரஸ் முன்னேறி நின்றது. அந்தச் சம்பவத்தைப் போலவே தென்னாட்டுப் பிரச்சினையை காங்கிரஸ்காரர்கள் நினைக்கிறார்கள். நாடு விடுதலை பெற்றால் ஆளுவது எந்தக் கட்சி என்ற பிரச்சினை திராவிட நாட்டில் இல்லை. ஆனால் ஆளுவோர், அந்த நாட்டு மொழி பேசுவோராகவும், அந்த நாட்டுக் கலாச்சாரத்தில் இரண்டறக் கலந்தவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதைத்தான் தி. மு. கழகம் வலியுறுத்தி வருகிறது. இதைக் காங்கிரஸ்கட்சி புரிந்து கொள்ளவில்லை. கட்சி போகட்டும்; அந்தக் கட்சி இளைஞர்களாவது இதுபற்றி அறிந்து கொள்ள முயன்றதாகக் கூடத் தெரியவில்லை. தனித் திராவிட நாட்டில் காந்தியார் முன்னைக் காட்டிலும் கௌரவமாக மதிக்கப்படுவார் என்பதையும், காங்கிரஸ் என்ற ஸ்தாபனம் நிலைத்து நிற்கும் என்பதையும், வெள்ளையனை விரட்டிய திருப்பணியில் முன் நின்று பணிபுரிந்த பண்டித நேரு கௌரவிக்கப் படுவார் என்பதையும் கற்றறிந்த காங்கிரஸ்காரர்களாவது உணர்ந்து கொள்ளுதல் அவசியமாகும்.

காங்கிரஸ் கட்சியில் இன்னும் சில 'விநோத வாதக்காரர்'களும் இருக்கிறார்கள். அவர்கள் புதிதாக முளைத்தவர்கள் என்று சொல்லவில்லை. வாதம் செய்ய அண்மையில் பழகிக் கொண்டவர்கள்; எங்கோ பயிற்சிபெற்று வந்தவர்களைப் போல பேசத் தொடங்கியிருக்கிறார்கள்.

வெள்ளையர் நாட்டிலிருந்து, இந்தியாவில் இடைக்கால சர்க்கார் அமைப்பதற்கு தூதுவர்கள் வந்தபோது விழித்துக் கொண்ட அறிஞர் ஜின்னா அவர்கள் பாகிஸ்தான் பிரிவினைக்கு வழிவகை செய்து கொண்டார். அப்போது அலட்சியமாக இருந்துவிட்ட பெரியாரைப் பற்றி நாம் குறைபட்டுக் கொண்டோம். "இப்படி ஒரு சந்தர்ப்பம் இனிக் கிடைப்பது அரிது. என்ன செய்வது, தொடர்ந்து பணியாற்ற வேண்டியதுதான்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் எழுதினார்கள்—பேசினார்கள். அதை நாடு தோறும் பரப்பினோம். "புதிய கட்சி—பலமில்லாதகட்சி—முன் பின் சரித்திரத்தில் இல்லாத கொள்கையில் வெற்றி பெற்று விட்டது. பாகிஸ்தானில் பிறைக் கொடி பறக்கிறது; நாம் ஏன் திராவிட நாடு பெறமுடியாது; அடைந்தே தீருவோம்" என்று மேடைகளில் நின்று மக்களுக்கு நம்பிக்கையூட்டினோம். அதன் விளைவு, நாட்டில் நம்பிக்கை நட்சத்திரம் முளைத்தது. ஆதரவு பெருகியது. இந்த வரலாற்றினை இப்போது நாம் நினைவுப்படுத்திப்பேசும்போது, காங்கிரஸ் இலட்சிய வாதிகள் புதிய ஞானோதயம் பெற்றது போல பேசத் தொடங்கி விடுகிறார்கள்.

நாம் சொல்வதும், சொன்னதும், "அதோ பாருங்கள் தாஜ்மஹால்! இதயத்தில் குடியிருந்த இன்பவல்லிக்கு எங்களது இஸ்லாமிய சக்கரவர்த்தி கட்டிவித்த காதற் கோயில்! இதோ குதுப்மினார்! அங்கே இருக்கிறது ஜும்மா மசூதி!" என்று ஜின்னா அவர்கள் நாலு இடிந்த கட்டிடங்களைக் காட்டி பாகிஸ்தானைப் பிரிக்க முடிந்தது. ஆனால் நாம்—சரித்திரத்தைக் காண்பிக்க முடியும்! இலக்கணத்தைக் காட்ட முடியும்! ஆனால் நமக்கு நாடு தர மறுக்கின்றனரே" என்பதுதான்.

அதற்கு அவர்கள், "பாகிஸ்தானைப் பிரித்துக் கொடுத்ததால்தான் குழப்பமும், தகராறுகளும் நடைபெறுகின்றன" என்று வாதிக்கிறார்கள்.

"ஏன் கொடுத்தீர்கள்! எந்த ஆதாரத்தைக்கொண்டு கொடுத்தீர்கள்" என்று நாம் பதில் சொல்ல மாட்டோம். ஆனால் தனித் தென்னாட்டில் குழப்பங்கள் அறவே இராது என்பதை மட்டும் காங்கிரசார் நம்பவேண்டும். ஏன்? திராவிட நாடு கருவில் உருவாகி வந்தது. பாகிஸ்தான் சுவிகாரத்திற்கு ஒப்பானது. அதுசந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு 'ஜனனமா'னது. **பிரிவினைக்கும் மீட்பு வேலைக்கும்** வித்தியாசம் உண்டு. எந்தப் பத்திரங்களுமில்லாது அது எனக்கு வேண்டும் பிரித்துக் கொடு என்பதுதான் பிரிவினை என்பது. இழந்ததை, தூங்கும்போது பறி கொடுத்ததை, திருப்பிக் கேட்பது எப்படி பிரிவினையாகும்? எப்படி நாட்டைத்

— 8-ம் பக்கம்

சாமியைப் பற்றி...!

தோழர் புகழேந்தி அவர்கள் மாவீரர் கே. வி. கே. சாமியோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர். நெல்லை மாவட்டத்தைச் சார்ந்தவர். இப்பொழுது தி. மு. க. தலைமை நிலையத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார். அவர் அண்மையில் சாமியோடு நிகழ்த்திய சில உரையாடல்களைச் சுவைபட எழுதியிருக்கிறார்.

9-9-56 ஞாயிற்றுக்கிழமை சென்னை 'அறிவகத்'தில் செயற்குழுக் கூட்டம் முடிந்து நானும், தோழர் சாமியும், சென்னை மாவட்ட முன்னாள் துணைச்செயலாளர் தோழர் கே. கோவிந்தசாமி அவர்களும் மற்றொரு நண்பரும் பஸ்ஸில் சைனாபஜார் வந்து சேர்ந்தோம். இறங்க வேண்டிய இடத்திற்கு முன்னதாக இறங்கி விட்டதால் அங்கிருந்து 'வி. வி. டி. கடை' வரை நடந்து செல்ல வேண்டியதாயிற்று. நான் சாமியைக் கேட்டேன்—'எனக்கு எப்பொழுது சாப்பாடு போடப் போகிறீர்கள்?' என்று. (நெல்லைப் பகுதியில் எப்பொழுது சாப்பாடு போடப் போகிறீர்கள் என்றால் திருமணம் எப்பொழுது செய்யப் போகிறீர்கள் என்பது பொருள்.) "ஏன் வேண்டுமானால் இங்கே ஒரு ஓட்டலிலேயே வாங்கித் தருகிறேனே" என்று, புரிந்துகொண்டே மாற்றிப் பேசினார் சாமி. பிறகு நான் நேரடியாகவே கேட்டேன் திருமணம் எப்பொழுது என்று. 'ஏதாவது நிலையான வருமானம் கிடைத்தால் திருமணம் செய்து கொள்ளலாம். இல்லாவிட்டால் இரண்டு பேருமே பட்டினி கிடக்கவேண்டியதுதான்......' என்று சிரித்துக்கொண்டே சொன்னார் அவர். நான் சொன்னேன்: பெரியார் நாமெல்லாம் நூற்றி ஐம்பது ரூபாய் சம்பளத்திற்கு சட்டசபைக்குச் செல்லவிருக்கிறோம என்று சொல்கிறாரே, நீங்கள் எம். எல். ஏ. யாக வந்துவிட்டால் அந்த நிரந்தர வருமானத்தை வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தலாம் அல்லவா? அப்பொழுது திருமணம் செய்துகொள்ள என்ன தடை? என்று. 'ஆமாம்...ஆமாம்...அந்த நினைவே எனக்கு இல்லை. அதை நம்பியாவது செய்துகொள்ளலாம்தான்' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார் அவர்.

16-9-56 திருநெல்வேலியில் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டம் நடைபெற்றது. சாமி, மாவட்டக் கழகக் கூட்டம் பொதுத் தேர்தல் குறித்தும், ஆக்கவேலைகள் குறித்தும், மாவட்டக் கழகத்திற்கென 'டேப்ரிகார்டு' ஒன்று வாங்கவேண்டியது குறித்தும் கூட்டத்தில் பல கருத்துக்களைத் தெரிவித்தார். கூட்டம் முடிந்து ஒருவருக்கொருவர் விடை பெற்றுக்கொண்டு பிரிந்தனர். நான் சாமியுடன் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு விடை பெற்றேன். அப்பொழுது நான் எப்போதும் சொல்லவேண்டும் என்று கருதிக் கொண்டிருந்த ஒரு சேதியைத் துணிந்து குறிப்பிட்டேன்.

"நீங்கள் கொஞ்சம் பாதுகாப்போடேயே நடந்துகொள்ள வேண்டும் அண்ணா. உங்களுக்கும் வேண்டாதவர்கள் உருவாகி விட்டிருப்பதை ஜூலை மாதம் பார்த்தோமே...எனவே நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்..."

அதற்கு தோழர் சாமி சொல்லிய பதில் இன்னும் எதிரொலித்துக் கொண்டே யிருக்கிறது.

'இந்த சாமி எப்பொழுது பொதுவாழ்வுக்கு வந்தேனோ அப்பொழுதே சாகத் தயாராகிவிட்டவன். இன்னும் சொல்லப்போனால் நான் வெட்டப்பட்டே சாவேன் என்பதை நீங்கள் நிச்சயம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்...'

அவரது இந்தப் பதிலைக் கேட்ட நானும் அங்கு நின்றுகொண்டிருந்த மற்றைய தோழர்களும் திகைத்து நின்றோம்.

—ப. புகழேந்தி.

பூக்காரி

மா. ரா. இளங்கோவன்
பி.ஏ., ஹானர்ஸ்

ஊரார்கள் சொல்வதுபோல் நான் அழகாகத்தான் இருந்தேன். கவர்ச்சியாகத்தான் இருந்தேன். என் பார்வையில் சிக்குவோர் நிலை தடுமாறச் செய்யுமளவில் பேரெழில் எனக்கிருக்கத்தான் செய்தது. இருந்தும் என்ன பயன்? நான் ஏழை. ஏழைக்கு அழகும், கவர்ச்சியும், கலையும் ஆகிய எல்லாம் ஆபத்துக் கருவிகள் தானே! ஏழை-ஆமாம்: அன்றுட வாழ்வுக்கே அவதிப்பட வேண்டிய நிலையில் ஏழை. அழகும் ஏழ்மையும் போட்டியிட்டு வளர்கின்றனவே என்று ஊரார் வியக்குமளவில் அமைந்த ஏழ்மைதான் எனக்குப் பெரிய குறையாக இருந்தது.

மலர் விற்று வருவது என்வேலை. மலர் விற்று, நான் கொணரும் பணத்தில் பெரும் பகுதியைக் குடிக்குச் செலவிட்டு உணவுக்குத் திண்டாடும் நிலையை உண்டாக்கிவிடுவார் வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்கிய என் தந்தை. அவரைத் திருத்த விழைந்தேன். முடியவில்லை. தளிர்த்து, பூத்து, காய்த்து, பழுத்து உதிரும் நிலைகளை அடுத்தடுத்துக்கொண்ட புளியமரம் ஓய்வு நிலையில் தன் புக்ககம் சென்றுவர எண்ணியதாம். ஆனால், உதிர்தலின் அடுத்தப்படியான தளிர்தல் அடுத்தே தொடங்கிட, அடுத்துள்ள நிலைகளும் தொடர்ந்து வருவதால் புக்ககம் செல்லாமலே போயிற்று என்று வேடிக்கையாக என் பாட்டி கூறுவதுண்டு. அதுபோலத் தானாயிற்று தவறான துறையில் பணம் செலவிட்டு வந்த என் தந்தையைத் திருத்த நான் கொண்ட முயற்சிகள் எல்லாம்.

அவர் வாழ்விலே அமைதி இல்லை. அவர் போகும் பாதையெல்லாம் படமெடுத்தாடும் பாம்புகள்தான் வரவேற்றன. உலகவர்க்கு உபதேசம் செய்யும் அவர் நான்காம் மனைவியோடு வாழ்கின்றார். ஊரார்க்கு உபதேசம் செய்துவிட்டு, அவர்கள் காணும் நிலையிலேயே இவ்வாறு நான்காம் முறையாக மணந்துகொள்வது நியாயமாகுமா என்று கேட்டால் இளமை [வாழுமளவில் மணத்துக்கேன் தடை என்று கேட்டு மேலும் பேசமுடியாமல் என்னை அடக்கிவிடுகின்றார்.

மணத்துக்கேற்ற மகள் இருக்கின்றாளே...அவள் கண் முன்னரேவா நம் களியாட்டங்கள் என்றெல்லாம் அவர் எண்ணுவதே இல்லை. ஏழ்மையின் சூழலில் சிக்கிய சிலந்தியென இருந்த நான் எப்படி 'மணம்' என்ற உயர்ந்த படியை எண்ணமுடியும்? நாள் எல்லாம் என் சிந்தனை மலர் தொடுப்பதில் தான் முனைந்து நிற்கும். வித விதமான மலர்களையல்லவா விரும்புகிறார்கள் மக்கள். மணம் இருக்கின்றதா மலரில் என்று பார்த்து வாங்குவோர் மிக மிகக் குறைவு. பார்ப்பதற்கு அழகாகவும் கவர்ச்சியாகவும் உள்ளதா என்று பார்த்து வாங்குவோரைத்தான் மிகுதியாகக் காணுகின்றேன். எனவேதான் நானும் வர்ணஜாலங்களில் சிறந்துள்ள மலர்களைத் தேடிச் சேகரிப்பதில் கவனம் செலுத்திவந்தேன்.

மலரில் மட்டுமா நிறவெறி கொண்டுள்ளவர்கள்! இல்லவே இல்லை. கையிலே அணியும் வளையல் முதல், காலிலே அணியும் மிதியடி வரை எல்லாம் போட்டியிட்டு மனத்தைக் கவரும் நிறங்களாகவே இருக்கின்றன. கண்ணிருந்தும் குருடனாகத்தான் செல்ல வேண்டும். நமக்கென ஒருத்தி இருக்கின்றாளே, நம்மை நம்பிவந்த வளை நாம் நம்பி வாழவேண்டாமா என்றெல்லாம் எண்ணி வீதியில் நடக்கும் ஒருவனையும் திரும்பிப் பார்க்குமளவில்செய்துவிடுகின்றன இந்த வண்ண மலர்களும் பிறவும். ஆமாம், தெருவோரத்தில் அமர்ந்து கொண்டு நாளும் நூற்றுக்கணக்கானவர்கள் இம்மாதிரி நடமாடுவதைக் கண்டு உள்ளம் வெதும்பி என்ன பயன்? நான்தான் ஏழையாயிற்றே!

காலையில் எழுந்ததும் மலர் விற்கும் இடம் சென்று, மலர் வாங்கி வருவதும், பின்னர் வீட்டு வேலைகளைச் செய்வதும் பின்னர் மலர் தொடுத்து மலர் விற்கப் புறப்படுவதும் எனக்குரிய வேலைகள். உடுத்து மகிழ நல்ல உடையில்லை. அடுத்து வாழ்பவரைப்போல் வளமாக வாழ முடியாவிட்டாலும் சற்றேறக்குறைய அவர்களைப்போல வாழ விரும்பினேன். அதற்கும் தடையாயிருந்தார். என் தந்தை தனக்கும் தன் அருமைக் காதலிக்கும்தான் நான் வேலை செய்வதாக எண்ணிவிட்டார். அவர்க்குத் தொடர்பில்லாத நிலையில் என்னை நினைக்கின்றார். எனவேதான், 'பெண்ணைப் பார்...வயது வந்த இவளை வீதியிலே நடமாட விட்டு வாழ்கிறானே இவள் தந்தை' என்ற ஏளனப் பேச்சுக்கும், 'பாரடா தம்பி பச்சைக்கிளியை, கண்ணாடிக் கன்னத்தைக் காட்டி என் உள்ளத்தைப் புண்ணாக்கிப் போடுகின்றாளடா கனி. ஆமாம்! சுவை மிக்கது. சுவைக்க வேண்டுமடா' என்றுவெறியோடு பேசிச் செல்லும் பலரது பேச்சுக்கும் நான் கவலைப்படாமல் இருந்தேன். வேதனையாக இருக்கிறது. நாளும் ஓயாத உழைப்பு-உழைப்பின் விளைவு இன்பமல்ல; துன்பம்தான். உழைக்கும்போதும் கண்ணின் கடைப் பார்வை காட்டினால், கருத்தினையறியத் துடியாய்த் துடிப்போர், தந்தை கவனியாதிருப்பதைக் கூறி, தமது வளர்ப்பில் வைத்து மகிழ விரும்புவதுபோல நடிப்போர், 'இரண்டு முழம் பூக்கொடம்மா' என்று மரியாதையுடன் கேட்டு, வாங்கும்போது என் முன்னங்கையையும் பற்றுவோர், போன்ற பலரிடை இருந்து தப்புவது பற்றிய சிந்தனைதான் மிக்கிருக்கும்: இன்பம் இன்பம் என்றால் எப்படியிருக்கும் என்று கேட்குமளவில்தான் நான் வாழ்ந்துவிட்டேன்.

வானத்தில் மேகங்கள் கருத்துத் திரண்டன. மேகங்கள் ஒன்றோடொன்று மோதுவதால் இடியும் மின்னலும் காதையும் கண்ணையும் கெடுக்கத் துவங்கின. இவற்றைப் போக்குமளவில் பலமான காற்று வீசியது. மழை வருமோ என்றஞ்சிய நான் மழை வராது என்ற எண்ணத்துடன் பூக்கூடையை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். தொடுத்த மலர்ச்செண்டுகள் விற்கப்பட்டுவிடும் என்பதில் எனக்குப் பெரு நம்பிக்கை உண்டு. என்னையடுத்துப் பலர் மலர் விற்றாலும் வாங்குவோரெல்லாம் என்னையே நாடிவரும் நிலையிருக்கும்போது நான் நம்புவதில் தவறில்லையல்லவா? எனவேதான், மழை வந்தாலும் கவலையில்லை. பொழுதைக் கழிப்பதற்கு பணம் வந்துவிடும் என்ற எண்ணத்தோடு புறப்பட்டேன். என் எண்ணமும் நம்பிக்கையும் சரிதான் என்று சொல்ல வாயற்ற நிலையில் இருந்துவிட்டு நீர்த் துளிகளை யென்மீது தெளித்தது வானம்!

சிறு சிறு துளிகள் பெருகின. கனத்த மழை. நான் அருகிலிருந்த கோவில்மண்டபத்தில் தங்கினேன். மழையின் காரணமாய் ஒரே கூட்டம் அங்கு. ஆனால் நான் நாளும் கண்டும் அலுத்தும் சலித்தும் போனவர்கள் அங்கில்லை. கோவிலிலே திருக்குறள் வகுப்பு முடிந்ததால், வகுப்பிற்கு வந்தவர்கள் வெளியிலேயே தங்கிவிட்டார்கள். வழக்கம்போல் என் மலர்க் கூடை காலியாகத் தொடங்கியது.

நான் ஒவ்வொருவரிடமும் வேடிக்கையாகப் பேசி மலர் விற்றேன்; விற்குமளவில் பயிற்சி பெற்றேன். நான் பிறந்ததும் வாழ்வதும் கிராமத்தில்தான் என்றாலும் வாழ்வுக்கு வகையமைத்துக்கொள்வது நகரத்தாரின் துணையாலல்லவா? அவர்கள் மனமறிந்து ஏற்பன சொல்லி மலர்விற்க முற்பட்டதால்தான் நான் புகழுடைய பூக்காரியாக மாறமுடிந்தது. கூட்டத்தில் ஒருவர் என்னைப் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

என்னைப் பார்ப்பதும் தன் கையிலிருந்த நோட்டில ஏதோ எழுதுவதுமாக இருந்தார். அவர் சிரிக்கவில்லை. எதனையோ ஆழ்ந்து எண்ணுபவர் போல இருந்தார். அடிக்கடி என்னைப் பார்த்தார். அடிக்கடி ஏதோ எழுதினார். எனக்குப் பயமாக இருந்தது. என் அச்சத்தைப் பெரிதாக்குவதாக இருந்தது. அடுத்திருந்த ஒருவன் "உன்னைக் கைது செய்யப்போகிறார். அவர் போலீசுக்காரர்... நீ கண் வீசிக் காசு பறிக்கிறாய் பார்...அதற்காகத்தான்" என்றான். பயந்தே போனேன். நானோ ஏழை, என்ன உழைத்தாலும் முன்னேற முடியவில்லை. தந்தையாரோ என்னைப் பற்றி எள்ளளவும் கவலைப்படாதவர். என்ன செய்வது நான்? அவரிடம் சென்று நான் தவறேதும் செய்யவில்லை என்றும், தவறேதேனும் செய்திருந்தால் மன்னிக்குமாறும் கேட்டுக் கொள்ள விரும்பினேன்.

நான் கிராமத்துப் பெண்தான். நாகரிகம் அறியாதவள்தான். அதனால்தான் போலும் நகரத்துப் பெண்களைப்போல நான் எல்லோரிடமும் சகசமாகப் பழக முடியவில்லை. நாணம் என்னைத் தடுத்தது. என்றாலும் என்னைப் பற்றித் தவறான எண்ணம் கொண்ட ஒருவரைத் திருத்த வேண்டுவது என் கடமை என்ற எண்ணம் நாணத்தை விலக்கியது. எனவேதான் அவரைத்தானடைந்தேன். நான் பூவிற்று வாழ்பவள் என்றும் மற்றவளைப்போல கள்ள உள்ளம் இல்லாதவள் என்றும் தவறி அறியாது, ஏதாவது தவறியிருந்தால் எடுத்துச் சொல்ல வேண்டுமென்றும் தண்டனைக்கெல்லாம் நான் தகுதியில்லை யென்றும் கூறினேன். உடலெல்லாம் நடுங்கியது. இந்த நிலை தந்தையிருக்கும்போதே எனக்கு ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. அழுதுவிட்டேன். கூட்டத்தார் எல்லாம் என்னையும் அவரையும் பார்த்தார்கள். அவர் பேசாமலிருப்பது கண்டு என் அழுகை பெருகியது. திடீரென ஒருவர் கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்து அவரிடம் பேச ஆரம்பித்து விட்டார். இருவரும் பேசியதிலிருந்து அவர்கள் நண்பர்கள் என்பதை மட்டும் அறிந்து கொண்டேன். புதிதாக வந்தவர் என்னை எடுத்து நிறுத்தி, "அழாதேம்மா. நீ பேசிய பேச்சு மிகவும் நன்றாகவிருந்ததாம். அதனை எழுதிக் கொண்டார். அவ்வளவுதான் நீயேன் இதற்குக் கவலைப்பட வேண்டும். அழாதே, ஏதோ... இந்தப் பூக்களைக் கொடு பணம் தருகிறேன்" என்று சொல்லி பணத்தை என் கையில் வைத்துவிட்டுக் கூடையிலிருந்த பூக்களை அவரே எடுத்துக்கொண்டார்.

எனக்கொன்றும் புரியவில்லை. பலிபீடமேற்றப்படும் கடாவுக்கு உரியவன் பூசைகள் நடத்துவான் என்பதை யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன். அதுதான் என் நினைவுக்கு வந்தது. ஒருவேளை நானும் அப்படித்தான்...என எண்ணுவேன். மீண்டும் அழுகைதான் என் உள்ளச் சுமையைப் போக்கும் வாயிலாய் அமைந்தது. அவர் பேசினார், வந்தவரல்லவா இருந்தார்! "அடடே, ஏன் அழுகிறாய். உனக்குப் படிக்கத் தெரிந்தால் இதோ, முன் நீ ஆத்திரத்தோடு பேசிய அந்தப் பேச்சுக்களைத்தான் அப்படியே எழுதியிருக்கிறேன். இதற்குப் போய் அழலாமா போ! போய் உன் வேலையைப் பார்" என்றார். இப்போதுதான் எனக்கு ஆறுதல் பிறந்தது.

என் உள்ளத்தில் புத்துணர்ச்சி ஏற்பட்டது. படிக்கத் தெரிந்தால் இதோ பார்...என்றாரே. ஆம், படிக்கத் தெரிந்திருந்தால் அடுத்தவன் சொன்னதை நம்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டிராதல்லவா? நம்பியதால் தானே — படிக்கா

காரணத்தால் தானே கூட்டத்தார் சிரிக்குமளவில் சீரழிந்துபோனேன். இருந்தாலும் கவலைப்படவில்லை நான். நான் படியாததால்தான் படிக்கவேண்டுமென்ற உணர்ச்சி இன்று ஏற்பட்டது. படிக்காததால் நான் பகட்டாகத் திரியாமல் பண்போடு வாழ முடிந்ததை எண்ணினேன். படிக்காது போனதால்தான் நாணத்தையும் உடையையும் தந்து மயக்க வந்தோரை வெறுத்து வாழ முடிந்தது. இனியும் நான் அப்படியிருக்க விரும்பவில்லை. ஓரளவேனும் படித்தவளாக மாற விரும்பினேன்.

"பூக்காரிக்கா படிப்பு? படிக்க நீ துவங்கிவிட்டால் பூ விற்பது யார்? நான் வாழ்வது எப்படி?" என்றெல்லாம் என் தந்தை கதற ஆரம்பித்துவிட்டார். இது நான் எதிர்பாராதது அல்லவே – அச்சம் கொள்ள! 'ஆசைநாயகி பூ விற்கிர் வாழலாமே சொகுசாக' என்று சொல்ல நினைத்தேன். ஆனால் வளர்த்த தந்தையாயிற்றே என்ற பாச உணர்ச்சி அவ்வாறு பேசுவதைத் தடுத்தது. தந்தையாரின் கருத்தைக் கேட்டால் முன்னேறுவதற்கு இருபத்தோராம் நூற்றாண்டுதான் பிறக்க வேண்டும் என்றெண்ணிப் புறப்பட்டேன்.

என்னைப் படிக்கவேண்டுமென்ற ஆர்வத்தைக் கொள்ளும்படிச் செய்ய அவருடைய வீட்டிற்கு தான் சென்றேன். அவரும் அவர் நண்பரும் பேசியிருக்கக் கண்டு, உள் நுழைந்தேன். யாருமற்றவள், சொந்த ஊர் எதுவென்று சொல்லத் தெரியாதவள், உறவினர் உளரா என்ற உண்மை அறியாதவள், இதுகாறும் படிக்க வேண்டுமென்ற எண்ணத்தைக் கனவிலும் காணாதவள் என்றெல்லாம் என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு படிக்க விரும்பியதாகவும், படிப்புக்கு ஊதியமாகவும் சொன்னேன். அவர் சிரித்தார். 'உன்னை ஏற்றுக்கொள்ள முடியாது' என்று சொல்வது போலிருந்தது அந்தச் சிரிப்பு. ஆனால், 'ஆகட்டும்' என்றார் அவர். உடனே தன் தாயை அழைத்து, என்னைக் கவனித்துக்கொள்ளச் சொன்னார்.

குளிக்க வேண்டுமென்றார் அந்த அம்மையார். குளிக்கவேண்டும்... நான் குளித்தே பல மாதங்களாகின்றன. குளிப்பது பெரியதொரு மலையைப் பெயர்ப்பது போலிருந்தது எனக்கு. உடலைத் தூய்மை செய்து உள்ளத்தூய்மையைப் பெறுதிருப்போரினும் உள்ளத்தூய்மைப் பெற்று உடல் தூய்மை அற்றிருக்கும் நான் எவ்வளவோ மேல்! என்ன பயன்? உடலையல்லவா உலகம் பார்க்கின்றது. காணமுடிவது உடல்தானே தவிர உள்ளமல்லவே! எனவேதான் போலும் அவர்கள் குளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். குளித்தேன்; உண்டேன்; படித்தேன்.

இன்று நான் மொழியரசி. சில மாதங்கட்குமுன் காண்போர்க்குரிய வேடிக்கைப் பொருளாக நாடோடி நங்கையாக, விரும்புவோரெல்லாம் என்னைத் தாங்கள் தங்கள் ஆசைநாயகியாய் உள்ளத்திலே எண்ணி மகிழும் அளவில் இருந்து பூ விற்றவளாக இருந்தேன். இன்றோ புத்தழகுடன் புத்துணர்வும் கொண்டு புது வாழ்வு வாழும் நான் என் தந்தையாராலேயோ உணரமுடியாத நிலையில் உள்ளேன். 'பேசத் தெரியவில்லையே உனக்கு. எழுதுகோலை இப்படியா பிடிப்பது? நீ படிக்கத் தகுதியில்லை' என்றெல்லாம் திட்டியும் அடித்தும் கற்பித்த அவர், 'இன்று நீ மிகவும் கெட்டிக்காரி. இன்னும் சில ஆண்டுகளுக்கு முன்னாலேயே இவ்வாறு பயிற்றுவிக்கப்பட்டிருந்தால் மிகவும் வல்லவளாய் வாழ்ந்திருப்பாய்' என்று பாராட்டுமளவில் நான் திறமை பெற்றுவிட்டேன்.

மண்ணைக் கிளறி விதை விதைக்கின்றோம், செடி முளைக்கும் என்ற எண்ணத்தோடு. செடி முளைத்தெழுந்து கொடியாகிறது. வளர்ந்த கொடி பற்றுக்கோடு நாடி அலைவதைப் பார்க்கின்றோம். கொடிக்குத் துணையாகக் கழியையோ கயிற்றையோ தந்துவிட்டால் வளமாக வளர்வதைப் பார்க்கிறோம். நான் செடியாக இருந்தேன். கொடியானேன்; வளர்ந்தேன். இன்று நான் பெற்ற புது வாழ்வின் பயனாய் தகுந்த துணையோடு வாழஎண்ணுகிறேன்.

பூக்காரியான என்னை உயர் நிலைக்குச் கொணர்ந்த அவரையே மணந்துகொள்ள விரும்பினேன். ஆசிரியர், மாணவி என்ற நிலையிலிருந்து விலகி, காதலன்–காதலி என்ற நிலையிலிருந்து புகலானேன். அவர் வாழ்க்கைக்கு ஏற்றவராகவே தெரியவில்லை. மொழித்துறையிலே அவர் ஆற்றும் தொண்டு சிறந்ததுதான் என்றாலும் வாழ்க்கை அதுவாகவே ஆகமுடியாதல்லவா? பெண் உள்ளம் விரும்பி நிற்பது அது மட்டுமல்லவே! தன்னைப் பாராட்டி, தன்னை மனமாரப் புகழ்ந்து தன் செயல்களால் மனம் மகிழச் செய்வதை எந்தப் பெண்தான் விரும்பமாட்டாள். பொழுது விடிந்தால், பொழுது போனால் அவர் பேசுவது எல்லாம் மொழியைப் பற்றியே. எனக்குப் பெருமையாக இருந்தது. மனம் திறந்து சொன்னேன் மணந்துகொள்ள விரும்புகிறேன் என்று.

அவருடைய நண்பர்க்கும் என் முன்னேற்ற வாழ்வில் பங்குண்டல்லவா? அவர் என்னை விரும்புவதாகச் சொன்னார். வேறு வழி, நான் விரும்பியவர் என்னை ஏற்கத் தயங்கக் கூடாதல்லவா? எனவேதான் அவரை மணந்து கொள்வதாக உறுதியளித்தேன்.

'நண்பனுக்கு அவனுடன் இருந்து கொண்டே இத்தகைய தீங்கு செய்யக்கூடாது. புறப்படு வெளியூர் போவோம். வாழ்வோம்' என்றார்.

படிக்காத பரம்பரையில் வந்தோரைப் படித்தவர்களாகச் செய்வது கடினம் என்று கூறும் மேதாவிகளை அவமானமுறச் செய்யுமளவில் ஆறே மாதங்களில் சிறந்த இலக்கியங்களைப் படிக்குமளவில் ஆற்றலுடையவளாகச் செய்த அவரை மணந்துகொள்ளத் துணிந்து, என்னை அறிவுடையவளாய்ச் செய்த அறிவுத் தெய்வத்திற்கு இறுதியாக நன்றியும் வணக்கமும் செலுத்திப் புறப்பட்டேன். பழைய பூக்காரியாக அல்ல, சிறந்த ஒரு பேராசிரியரின் மனைவியாக.

[ஜியார்ஜ் பெர்னாட்ஷா எழுதிய **"பிக்மாலியன்"** நாடகத்தின் சுருக்கம்.]

காணவில்லை ; தெரிவிக்கவும்!

கடந்த **29-9-56** உ யிலிருந்து நமது அலுவலகத்தில் வேலை பார்த்து வந்த ச. செல்லப்பாண்டியன் என்பவரைக் காணவில்லை. இதுவரை அவர் இருக்கும் இடமோ, தகவலோ தெரியவில்லை. காண்பவர்கள் தென்றல் முகவரிக்குத் தெரிவிக்கவும். அவரது சொந்த ஊர் தென்காசித் தாலூகாவில் உள்ள கடபோகாந்தி என்னும் சிற்றூராகும்.

—நிர்வாகி.

தேர்தல வருகிறது : தெரிந்துகொள்ளுங்கள்;

2. பக்தவத்சலம்

மானம் எனும்வார்த்தை மதிப்பிழந்து போனதற்கு
வழிவகுத்தார் யார்?பக்த வத்சலனார் என்பார்கள்
தானும் மனையும் தழைத்தோங்க வேண்டுமெனும்
தரமான கொள்கையினைத் தன்கொள்கை யாய்க்கொண்டு
வருவார்க்குக் கால்பிடித்து வாய்திறந்து பற்காட்டி
மந்திரியாய் எந்நாளும் வாழ்பவர்கள் இவர்தவிர
வேறெவரும் இல்லை! வீராதி வீரரென
தேர்தலிலே நிற்பார்; ஜெயிப்பதில்லை என்றாலும்
கொல்லைப் புறத்தில் கொடிகட்டி ஏறிடுவார்
மக்கள் அரங்கில் மதிப்பிழந்து போனாலும்
தக்கவரே போலத் தரங்குறைந்த வார்த்தையினால்
எட்டரைப் பேர்கொண்ட எழிலான கூட்டமதில்
வாய்கிழியப் பேசி வருவாரைத் தூங்கவைத்து
பலகார வகைகளிலே பலப்பலவும் ருசிபார்த்து
கர்ப்பிணிபோல் தொந்தி கச்சிதமாய் உருவெடுக்க
சுற்றிச் சுழன்று சூறா வளியெனவே
போவார்; வருவார் போலீசார் துணையுடனே!
அன்றந்த ஸ்ரீராமன் அன்புக்குப் பாத்திரமாய்
இன்றுவரும் ஸ்ரீராமர் எல்லோர்க்கும் நல்லவராய்
அரசியலாம் பெருங்கடலை அரைநொடியில் கடந்துவந்து
சஞ்சீவி பருவதத்தைத் தன்கையில் தான்தாங்கி
பதவியெனும் ஜானகிக்குக் கணையாழி பரிசளித்து
மீட்டுவந்து ஸ்ரீராமன் மின்னார் திருவடியில்
தண்டனிட்டு வால்தூக்கி 'சாமீ' எனப்பணிந்து
'கண்டுவந்தேன் ஜானகியை! காலமெல்லாம் உன்நினைவால்
ஏங்குகிறாள் சாமீ! இதுசமயம் வாருமென
கூட்டியே தோள்சுமந்து குதித்தோடி அன்னவளைக்
காட்டிக் கொடுக்கும் கலிகாலத் 'தூத'ரிவர்
இன்றந்த அனுமந்தன் இருந்தால் இவரைத்தான்
வாரீசு எனக்கொள்வான் மற்றவர்க்குக் கிட்டாது
பிரகாசம் வந்தார்; பிரதானம் இவர்வகித்தார்
அடுத்துவந்தார் ஓமாந்தூர்; அவர்தாளில் தண்டனிட்டார்
பாளையத்து ராஜாவைப் பதவிக்காய்க் கால்பிடித்தார்
ஆச்சாரி யார்க்கு அடிவருடும் மந்திரியாய்
காமராஜ் வந்தவுடன் கரங்குழைக்கும் சேவகராய்
வந்தவர்கள் எல்லோர்க்கும் வாழ்க்கைத் துணையானார்
அடுத்தெவரும் வந்தாலும் அவரவர்க்குத் தக்கதுபோல்
கூனிக் குறுகிக் குணம்பார்த்து மொழிபேசி
பதவி எலும்பைப் பற்றிப் பிடித்திடுவார்
முன்னாள் வரலாற்றை முழுக்கப் படித்தாலும்
இவர்போலத் தமிழ்வீரர் இருந்ததில்லை எனக்காண்போம்
அத்தனையும் சேர்த்து அளந்து கொடுத்துவிட்டு
வெறுங்கூடு கொண்டு வீற்றிருக்கும் வத்சலனார்
விரைந்துவரும் தேர்தல் வெங்களத்தில் குதித்தாரேல்
தோல்வியே மீண்டும் துணை!

—கதா

"போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 3 || 13—10—56 || இதழ் 7

தமிழ் முரசு !

வருகின்ற 15-ம் தேதி, வட எல்லைப் போராட்டம் என்று ம. போ. சி. அறிவித்திருக்கிருர். போராட்டத் திட்டங்களையும் அவர் விளக்கமாகத் தெரிவித்திருக்கிருர்.

சங்கிலியைப் பிடித்து இழுத்து ரயில்களை நிறுத்துவது.

மத்திய அரசாங்க அலுவலகங்களின் முன் அமைதியாக மறியல் செய்வது.

டில்லி-சென்னை அமைச்சர்களுக்கு கருப்புக் கொடி காட்டி அதிர்ப்தியைத் தெரிவிப்பது.

வட எல்லைப் போராட்டத்திற்குத் தடை போட்டால் அதை மீறுவது.

—இவை ம. போ. சி. நடத்த இருக்கும் வட எல்லைப் போராட்டத் திட்டங்கள். இந்தத் திட்டங்களை வேறு எந்தக் கட்சி நிறைவேற்றி செயலில் இறங்கியிருந்தாலும், காங்கிரசார்—அதிகாரத்திலிருக்கும் 'தியாக சீலர்'கள் அலட்சியமாக இருந்துவிடக் கூடும். மிகப் பெரிய—பலம்பெற்ற தி. மு. கழகம் நடத்திஞல் கூட 'எதிர்க்கட்சிக்காரர்கள் இப்படித்தான் குழப்பம் செய்வார்கள்' என்று சமாதானம் செய்துகொள்ள முடியும். ஆனால் ம. போ. சி.?—காங்கிரஸ் பெரும் புள்ளிகளின் முகங்களிலே கூட கேள்விக்குறி பிறக்கத்தான் செய்யும். பழம் பெரும் காங்கிரஸ்காரர்; பலமுறை சிறை சென்றவர், காங்கிரஸ் என் தாய்க்கட்சி என்பவர், அந்த ம. போ. சி. அல்லவா முரசு கொட்டி விட்டார்.

அக். 15!

ரயில்கள் நிறுத்தப்படும்!

மத்திய அரசு அலுவலகங்களின் முன் மறியல் நடத்தப்படும்!

மிரட்டுகிருர் ம. போ. சி. என்று எண்ணியவர்கள் மிரளுகிற வகையில், 'ஆகட்டும் பார்ப்போம்' என் போர் பெருமூச்சு விடுகிற முறையில், ம. போ. சி. போர்த் திட்டங்களை வெளியிட்டிருப்பது தமிழ் மக்களின் பாராட்டுதலுக்குரிய துணிகரச் செயலாகும்.

அரசியலில் எந்தக் கொள்கையுடையோரும் அவர்கள் தமிழர்களானல், அவர்களால் ஒதுக்கித் தள்ள முடியாத சிக்கலை தன் கைக்குள் வைத்து மூடிக்கொண்டு மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் வேடிக்கை காட்டிக்கொண்டிருப்பதை எத்தனை நாளைக்குத்தான் அனுமதித்துக் கொண்டிருப்பது.

டில்லியிலே உள்ள 'பெருமக்கள்' எப்போதாவது காங்கிரசின் சுதந்திரப் போராட்டத்தைப் பற்றிப் பேசினல், "ஆகா, தமிழர்களின் வீரமே வீரம்! சிதம்பரனர், திரு. வி. க., இராமசாமி நாயக்கர்!' என்று பேசி தமிழர் தலையில் பனிக்கட்டியை வைக்கிறார்கள். ஆனல் அதே தமிழர்களின் பிரச்சினைகள் தான் புறக்கணிக்கப்படுகின்றன. என்பது அந்தச் செங்கோட்டைக் குல்லாக்களுக்குப் படுவதில்லை. பட்டாலும் கஷடப்பட்டு மறந்துவிடப் பழகிக் கொண்டிருக்கிருர்கள். அதனுல்தான், வெள்ளையனை விரட்ட வீரம்காட்டிய தமிழர்கள், வடவரால் சாதிக்கமுடியாத போராட்டக் காரியங்களை அறநெறியின் வாயிலாகச் சாதித்த தமிழர்கள் இன்று வடநாட்டு 'அலட்சிய'த்தையும் கண்டிக்கத் தொடங்கிவிட்டனர்.

ஆந்திரத்தோடு இணைக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பகுதிகளை தமிழகத்தோடு சேர்க்க வேண்டும் என்ற ஜீவலட்சியத்தின் அடிப்படையில் போராட நினைக்கும் ம போ. சி. யின் திட்டத்திற்கு தமிழ் மக்கள் ஒன்றுபட்டுக் கரம் தூக்குவார்கள் என்று நம்புகிறோம். அறிஞர் அண்ணு அவர்கள் ம. போ. சி. சிறையிலிருந்தபோது நேரில் கண்டு பேசிவந்திருப்பதை தமிழர்கள் அனைவரும் அறிவர். ஒரு நாட்டின் வளத்திற்கு அந்த நாட்டின் பூமி நூல் சரிதமும் இன்றியமையாதது என்று எண்ணும் தி. மு. கழகம் ம. போ. சி. யின் போராட்டத்திற்த துணை நின்று குரல் எழுப்பும் என்று நம்புகிறோம். தமிழரின் ஏகோபித்த சக்தி எந்தப் போர்முனையிலும் தோல்வி கண்டதில்லை என்று மகிழ்வுடன் கூறி, ம போ. சி.க்கு தமிழ் நாட்டின் எல்லைப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நமது ஆதரவு உண்டு என்று உறுதியளிக்கின்றோம்.

★ ★

நாங்களும் நீங்களும்

'தென்றல்' கண்டு மகிழ்ந்த நண்பர்கள் பலரும் பாராட்டுரை வழங்கியுள்ளனர்-நன்றி.

இடையிலே, நிர்வாகத்தில் நிகழ்ந்திருந்த சில விரும்பத் தகாத நிகழ்ச்சிகளின் காரணத்தால்தான் தென்றலை நிறுத்திவைக்க நான் விரும்பினேன். நம்பிக்கையான ஊழியர்கள் இல்லாததால் 'தென்றல்' பொறுப்பில் எனக்கு மிகுந்த சலிப்பும் கவலையும் ஏற்பட்டிருந்தது. எனது மற்ற வேலைகளையும் கூடுமான வரை, 'தென்றல்' குலைத்தே வந்தது. ஆகவே, 'தென்றல்' வீசியது போதும் என்றே நான் முடிவுக்கு வந்திருந்தேன்.

ஆனல்.........

'தென்றல்' இல்லாமல் நண்பர்கள் பலரும் எவ்வளவு வருந்திஞர்கள் என்பதை, தினசரி நூற்றுக்கு மேற்பட்ட கடிதங்கள் சுமந்துவரத் துவங்கின. "தென்றலையா நிறுத்திவிர்கள்?" என்பாரும், "ஐயா! இரண்டு மாதமா! தாளாதே" என்பாரும், "எப்போது?" என்று ஒரே வார்த்தையைக் கார்டில் எழுதி விட்டு, பெரிய கேள்விக்குறியிட்டு அனுப்புவாரும் அப்பப்பா! நான் அயர்ந்தே போனேன்.

நான் திருவனந்தை சென்றிருந்த பொழுது, நண்பர்கள் இரா. இளஞ்சேரன் அவர்களும், ஆ. மாதவன் அவர்களும், சா. வி. மு. நம்பி அவர்களும் மற்றையத் தோழர்களும், என் நிம்மதியைக் கெடுத்துவிட்டார்கள், தென்றலைப் பற்றியே பேசி! "தென்றல் புதிய இலக்கியப் பரம்பரையையே ஆக்கித் தந்தது" என்ருர் இளஞ்சேரன். துக்கம் விசாரிக்க வருகிறவர்களிடத்தில், கவலையோடு அமர்ந்திருப்பவன் போல் அமர்ந்திருக்கவேண்டிய நிர்ப்பந்தம், எனக்கு ஏற்பட்டது. எங்கு சென்ருலும், 'தென்றல்' பற்றியே நண்பர்கள் விசாரித்தார்கள்.

தென்றலை நிறுத்திவிட்டு, மறு நாள் நான் காரைக்குடிக் குறள் விழாவில் கலந்துகொண்டேன். அப்போது 'தென்றல்' சில மாதங்களுக்கு வராது என்ற செய்தி யாருக்கும் தெரியாது. குறள் விழாவின் தலைவரான டாக்டர் மா. இராசமாணிக்கஞர், என்னைப் பேச அழைக்கும்போது, என்னை அழைக்காமல் தென்றலையே அழைத்தார்; தென்றலைப் பற்றியே பேசிஞர். "இப்படி ஒரு இலக்கிய இதழ் வந்ததே இல்லை!" என்ருர். அவர் பேசப் பேச என் நெஞ்சம் கொந்தளித்தது. பிள்ளையைப் பறி கொடுத்தவன்போல் ஆனேன். அண்ணன் இராமசுப்பையா அவர்களுக்கு மட்டும் செய்தி தெரியும். அவர் கலங்கியே விட்டார். எனக்குக் கிடைத்த நல்ல நம்பிக்கையான நண்பர்களில் அவர் ஒருவர். ஆதலின் இருவருமே வருத்தத்தைப் பறிமாறிக்கொண்டோம்.

அதன்றியும் திருச்சி நண்பர்களும் என் உயிர்த் தோழர்களுமான அம்பில் தர்மு, எம். எஸ். மணி, திராவிடப்பண்ணை முத்து, பொன்னுச்சாமி, பாண்டுரங்கம், இராசரத்தினம் முதலியோர், என்னைக் கண்டிக்கக்கூடச் செய்தார்கள். கோவைத் தோழர் எஸ். சதாசிவம், மிகவும் வருந்தி எழுதியிருந்தார். இலங்கை நண்பர் ஒருவர், வெறும் காகிதம் ஒன்றைக் கூட்டினுள் வைத்து அனுப்பி, அதனடியில், "தென்றல் வராத போது, உங்களுக்கு நான் எழுதுவதற்கு என்ன இருக்கிறது?" என்று மட்டும் எழுதியிருந்தார். இது மட்டுமா?-பெயர் குறிப்பிட முடியாத அளவுக்கு பலரும் எழுதியிருந்தனர்.

அவர்கள் மகிழ, தென்றல் வந்து விட்டது.

கண்டு மகிழ்ந்த, கிரனூர்த் தோழர் சதகத்துல்லா, "பாண்டிமா தேவி'யைக் காணுமே?" என்கிருர். சென்ற இதழ், மறைந்த பெருமகன், கே. வி. கே. சாமிக்கு வீரவணக்கம் செலுத்தும் இதழாதலால் அவர் பற்றிய கவிதையை வெளியிட்டேன். இந்த இதழில் பாண்டிமாதேவி வருகிறது.

அதே நண்பரும்; மதுரைத் தோழர் ஒருவரும், "மனம்போல வாழ்வு" தொடர் கதை என்ன ஆயிற்று என்று கேட்டுள்ளார்கள். சில ஏசண்டுத் தோழர்கள் ரத்து செய்யப்பட்டதால் அந்த ஊர்களுக்கு இரண்டொரு வாரங்கள் தென்றல் செல்வது தடைப்படும். அதனுல், அத்தனை ஊர்களுக்கும் புதிய ஏசண்டுகள் நியமிக்கப் பட்டதும் புதிய தொடர் கதையே எழுதலாமென நினைக்கிறேன். 'மனம்போல வாழ்வு', திருச்சி நண்பர்களால் புத்தகமாக வெளியிடப்படும் நிலையில் உள்ளது.

புதிய தொடர் கதையின் தலைப்பு **"சராசரி மனிதன்"** என்பதாகும். நிற்க,

உதகைத் தோழர் 'வளமைப் பித்தன்'. தென்றலின் சென்ற இதழ் பற்றி சுவையானதொரு விமர்சனம் செய்துள்ளார். அவருக்கு நன்றி. சுப்பிரமணியபுரம் தோழர். எஸ். சோலை, "தென்றலை ஏழு நாட்களுக்கும் கொஞ்சம் கொஞ்சமாகப் படிக்கிறேன். ஒரு நாளில் முழுக்கப் படித்துவிட்டால் ஆறு நாட்கள் ஏங்கவேண்டி வருமே" என்று வரைகிருர். வாழ்க! அனைவரும், கே. வி. கே. சாமி பற்றிய கவிதை, கண்ணீர் மல்கச் செய்ததாகக் குறிப்பிடுகிருர்கள். சாமியின் சேவையை எண்ணிப் பார்த்தால், கவிதையின் அளவு கோடியில் ஒருபாகம்தான்.

முல்லை

முல்லை, நவம்பர் முதல்வாரம் வருகிறது. கட்டுரை, கவிதைகளின் தரத்திலேயே நான் அதிக கவனம் செலுத்த விரும்புகிறேன். அதனுல், அதிகமான படங்களை முல்லையில் நண்பர்கள் எதிர்பார்க்கவேண்டாம். முல்லைக்கென்று வரலாற்று ஆராய்ச்சிக் கட்டுரைகளும், இலக்கியக் கட்டுரைகளும் எதிர்பார்க்கப் படுகின்றன. அனுப்பும் கட்டுரைகளுக்கு, நண்பர்கள் பிரதி வைத்துக் கொள்வது நலம். பிரசுரிக்கப் படாதவை, திருப்பி அனுப்பப்படமாட்டா. நண்பர்கள் முக்கியமாக கோவை நண்பர் எஸ். சதாசிவம், அவர்களின்-ஆலோசனைப்படிதான் முல்லை விலை, நான்கு அணுவாகக் குறைக்கப்பட்டது.

கவனத்திற்கு

ஏசண்டுத் தோழர்களும் சந்தா அனுப்பும் தோழர்களும் நிர்வாகி, தென்றல் என்றும், நிர்வாகி, முல்லை என்றும் தனித்தனியேதான்

— 8-ம் பக்கம்



இந்த விழா ஐம்பது தினங்களுக்குமுன் கோவையில் நடைபெற்றது. ஆனாலும் புகழ்பெற்ற ஒரு தமிழ்ப் பேராசிரியருக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்த விழா நிகழ்ச்சிகளை வெளியிடும் பெருமை கொள்ளுவதில் பெரும் பங்கு 'தென்றலு'க்கு [illegible] முழு விபரங்களைச் சேகரித்துப் பிரசுரித்திருக்கிறோம். பிற பத்திரிகைகளால் மறைக்கப்பட்ட டாக்டரின் சுவைமிகுந்த நன்றியுரையும் இங்கே இடம் பெற்றிருக்கிறது.

(ஆ—ர்)

கோவைத் திருவள்ளுவர் கழகத்தார் மதுரை தியாகராசர் கல்லூரியின் தமிழ்த்துறைத்தலைவர் டாக்டர் மா. இராசமாணிக்கனருக்குப் பொன்னாடை போர்த்து விழா ஏற்பாடு செய்தனர். ஏறத்தாழ 5000 மக்கள் விழா மண்டபத்திற்கு வந்தனர். விழாவிற்கு இராசா. முத்தையா செட்டியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். கழகத்தலைவர் டாக்டர் அவர்களுக்குப் பாராட்டிதழ் படித்து அளித்தார். சென்னைக் கல்வி, நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் டாக்டருக்குப் பொன்னாடை போர்த்து, மலர் மழை பொழிந்தார். அவரைப் பின்பற்றி இராஜா சர். அவர்களும், குன்றக்குடி அடிகளாரும், பிறரும் மலர் மழை பொழிந்தனர்.

கல்வி அமைச்சர் பின்வருமாறு பேசினர்:- கல்வி கேள்விகளில் உயர்ந்த புலவர்களைப் போற்றுவது நமது வழக்கம். தமிழ் ஆட்சிமொழியாக வருவதற்கு ஏற்ற சொற்களை அமைத்துத் தருதல் டாக்டர் போன்றவர் கடமையாகும். கோவையில் தோற்றுவிக்கப்படும் பல்கலைக் கழகத்தில் எல்லாப் பாடங்களும் தமிழிலேயே கற்பிக்கப்படல் வேண்டும் என்பது எனது விருப்பம்.

இராசா. தலைமையுரை

இராசா முத்தையா அவர்கள் தலைமை வகித்துப் பின்வருமாறு பேசினர்: டாக்டர் இராசமாணிக்கனர் அவர்களைப் பல ஆண்டுகளாக நான் அறிவேன். அவரைப் பாராட்ட இவ்வளவு திரளான மக்கள் வந்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். டாக்டர் நாடறிந்த புலவர், பல ஆராய்ச்சி நூல்களையும், பல தமிழ்ப்பாட நூல்களையும் எழுதியவர்; நாடெங்கும் சுற்றித் தமிழ், தமிழர் என்பன பற்றிப் பேசி வருபவர். இவரைப் பாராட்டுதல் தமிழைப் பாராட்டுவது போன்றது.

குன்றக்குடி அடிகள்

டாக்டர் இராசமாணிக்கனரைப் பல ஆண்டுகளாக நான் அறிவேன். அவர் பழுத்த சைவர்; ஆனால் சமய ஊழல்களைக் கண்டிக்கும் மனவுறுதி உடையவர். சிந்து வெளி நாகரிகம், பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு, பெரியபுராண ஆராய்ச்சி, சைவசமய வரலாறு முதலிய பல ஆராய்ச்சி நூல்களை எழுதியவர்; சைவ சமயக் கூட்டங்களிலேயே சமய ஊழல்களைக் கண்டிக்கும் மனவுரம் படைத்தவர். அவருக்குப் பொன்னாடை போர்த்துச் சிறப்பித்தது மிக்க பொருத்தமானது.

டி. எம். நாராயணசாமி பிள்ளை

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. டி. எம். நாராயணசாமி அவர்கள் பேசுகையில், "டாக்டரை நான் பல ஆண்டுகளாக அறிவேன். சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்க்குழுவில் அவரும் நானும் பணியாற்றி வருகிறோம்; புத்தகங்களை நன்கு படித்து அவற்றின் குணம் குற்றங்களை எடுத்துக் கூறுவதில் அவர் சமர்த்தர்; சிறந்த கருத்துக்கள் அடங்கிய சொற்பொழிவாற்றுவதில் வல்லவர்; வித்துவான் பட்டத்திலிருந்து தாமே உழைத்துப் படிப்படியாக உயர்நிலைக்கு வந்தவர். இவரை முன்மாதிரியாகக் கொண்டு மற்றவர் முன்னேற வேண்டுமென்பது எனது விருப்பம்" என்று குறிப்பிட்டார்.

சி. எம். இராமச்சந்திரன் செட்டியார்

முன்னாள் அறநிலையக் கண்காணிப்பாளராக இருந்த இராவ் பகதூர் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் பேசியதாவது: வரலாற்றுத் துறையிலும், கல்வெட்டுத் துறையிலும் டாக்டர் இராசமாணிக்கனார் சிறந்தவர். அவர் எழுதிய பல்லவர் வரலாற்றிற்கு நான் முன்னுரை வழங்கியிருக்கிறேன். அவருடைய ஆராய்ச்சி நூல்கள் நாட்டிற்குப் பயன்தரத் தக்கவை. அவரைப் பாராட்டுவதில் நான் உண்மையில் பெருமையடைகிறேன்.

சிவக்கவி மணி சி. கே. எஸ்.

பெரியபுராணம் விரிவுரை ஆசிரியரான சிவக்கவி மணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் பேசுகையில், "டாக்டர் சைவ சமய நூல்களில் சிறந்த ஆராய்ச்சியுடையவர்; சிறந்த சைவர்; அவர் எழுதிய பெரிய புராண ஆராய்ச்சி பற்றிய ஆங்கில நூலை நான் பார்வையிட்டு மகிழ்ந்தவன். அவருடைய பிற ஆராய்ச்சி நூல்களும் போற்றத் தக்கவை" என்று குறிப்பிட்டார்.

கோவை மாவட்டத் தண்டல் நாயகருக்கு உதவியாளராக உள்ள உயர்திரு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் பேசியதாவது: டாக்டர் இராசமாணிக்கனர் வரைந்த பல்லவர் வரலாறு என்னிடம் இருந்தது. அதனைக் "கல்கி" ஆசிரியர் கிருட்டிணமூர்த்தி என்னிடமிருந்து எடுத்துச்சென்றார். 3 மாதங்களுக்குப் பிறகு "அப்புத்தகம் என்னிடமே இருக்கட்டும். நான் எழுதும் 'சிவகாமியின் சபதத்திற்கு' தேவைப்படுகிறது. நீங்கள் வேறு ஒன்று வாங்கிக்கொள்ளுங்கள்", என்று கூறிவிட்டார். இதைக் கொண்டு டாக்டர் அவர்களின் ஆராய்ச்சிச் சிறப்பை நீங்கள் நன்கு அறியலாம்.

திரு. மெ. சுந்தரம்

கோவை சோமசுந்தரம் அச்சகத்தின் மேலாளரான திரு. மெ. சுந்தரம் (பி. ஓ. எல். ஆனர்சு) கூறியதாவது: நான் டாக்டர் அவர்களின் தமிழ் மாணவன். அவர் பல ஆண்டுகளாக எழுதி வந்துள்ள ஆராய்ச்சி நூல்கள், புலவர்களாலும், மாணவர்களாலும், அறிஞர்களாலும்பெரிதும் பாராட்டப்படுகின்றன. திருவள்ளுவர் காலம், தமிழர் திருமணத்தில் தாலி, கம்பன் யார்?, சைவ சமயம், தமிழ் மொழிச் செல்வம், தமிழ்இனம் என்னும் புதிய நூல்கள், டாக்டருடையமொழி-இலக்கிய - வரலாற்று ஆராய்ச்சித் திறனை நன்கு விளக்கக் கூடியவை. இத்தகைய பேரறிஞரைப் பாராட்டுவது தமிழ் வளர்ச்சிக்கு நல்லது.

டாக்டர் பதில் உரை

பாராட்டுப் பெற்ற டாக்டர்இராசமாணிக்கனர் தமக்கு வாழ்த்துரை கூறிய அனைவரையும் பாராட்டிப் பேசுகையில் சொன்னதாவது: அண்ணாமலைப்பல்கலைக்கழக இணை வேந்தரான செட்டிநாட்டரசர் தலைமையில் சென்னைப் பல்கலைக் கழக இணைவேந்தரான திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் எனக்குப் பொன்னாடை போர்த்திய து தமிழுக்குச் செய்த பெருஞ் சிறப்பாகும். தமிழையும் சைவத்தையும் நாட்டில் வளர்த்துவரும் குன்றக்குடி அடிகளும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தரான திவான் பகதூர் டி. எம். நாராயணசாமி அவர்களும், சைவப் பேராசிரியர் சிவக்கவி மணி அவர்களும், முன்னாள் இந்து அறநிலையப் பாதுகாப்பாளரான திரு.சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்களும், திரு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்களும், என் பழைய மாணவர் மெ. சுந்தரம் அவர்களும் என்னைப் பாராட்டிப் பேசியதற்கு எனது நன்றி உரியது.

தமிழ்மொழியைப் பற்றியும், இலக்கியத்தைப் பற்றியும் பேசவும் எழுதவும் நாட்டில் சிலருண்டு. ஆனால் தமிழர் வரலாற்றைப் பற்றிப் பேசவோ எழுதவோ ஆட்கள் இல்லை. அதனால்தான் திரு. டி. வி. சதாசிவப் பண்டாரத்தாரைப் பின்பற்றி நான் இத்துறையில் உழைத்து வருகிறேன். தமிழகத்து வரலாறு நன்கு அறியப்படல் வேண்டும். அதனை அறிந்தால் தான் மொழி வரலாறும், இலக்கிய வரலாறும், சமுதாய வரலாறும், சமய வரலாறும் நன்கு அறியப்படும். வரலாற்று அறிவோடு கூடிய தமிழ்ப்புலமையேவேண்டற்பாலது. புதை பொருள் ஆராய்ச்சியிலும் கல்வெட்டு ஆராய்ச்சியிலும் தமிழ்ப் புலவர்கள் பயிற்சி பெறுதல்வேண்டும். இத்துறைகளில் எல்லாம் தமிழர் கவனம் செலுத்தினற்ருன் தமிழினம் பெருமையோடு வாழ முடியும்.

தமிழ் வாழவேண்டும். பிற மொழியால் தமிழ் கெடும்படி விடலாகாது. தமிழ் வழிபாடு வழக்கில் வரவேண்டும். இவ்வாறு சொல்வதால் சைவனாகிய என்னையே திராவிட கழகத்தான் என்று கூறுகின்றனர் என்று கேள்விப்பட்டேன். இக்குறும்பர்கள் குன்றக்குடி அடிகளாரையும், 'காவியாடைக்குள் கருப்புச்சட்டை' என்று கூறினர். [இவ்வமயம், தலைவராக இருந்த இராசா அவர்கள், 'நான் தமிழிசை வேண்டும் என்று கூறுவதால் என்னையும் திராவிட கழகத்தான் என்று கூறுகின்றனர்' என்றார்கள்] இதனால் என்ன தெரிகிறது? நாட்டிலுள்ள அறிவாளிகளைத் திராவிட கழகத்தார் என்று அக்குறும்பர்கள் கூறுகின்றனர். இதனால் நாம் வருந்தப் படோம். (பலத்த கைதட்டல்.)

தமிழ்ப் பொதுமக்கள் தமிழ் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும்; திருமணத்திலும், கோவிலிலும், வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் தமிழ் வளரப் பாடுபட வேண்டும். இதுவே எனது வேண்டுகோள்.

திருவள்ளுவர் கழகத் தலைவர் நன்றிகூற, விழா இனிது முடிந்தது. விழா மாலை 5-15 முதல் இரவு 8-15 வரை நடந்தது. கூட்டத்தினர் மிகுந்த தமிழ் உணர்ச்சியுடன் இருந்தமை பெரிதும் பாராட்டற்குரியது. ★

பாவினம்!

1. வெண்பா, 2. ஆசிரியப்பா, 3. கலிப்பா, 4. வஞ்சிப்பா, 5. மருட்பா என்னும் தொகையானும், 1. குறள் வெண்பா, 2. சிந்தியல் வெண்பா, 3. இன்னிசை வெண்பா, 4. நேரிசை வெண்பா, 5. பஃறொடை வெண்பா, 6. நேரிசை ஆசிரியப்பா, 7. இணைக்குறள் ஆசிரியப்பா, 8. நிலைமண்டில ஆசிரியப்பா, 9. அடிமறி மண்டில ஆசிரியப்பா, 10. நேரிசை யொத் தாழிசைக் கலிப்பா, 11. அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா, 12. வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா, 13 வெண் கலிப்பா, 14. தரவு கொச்சகக் கலிப்பா; 16. சிற்றாழிசைக் கொச்சகக் கலிப்பா, 17. பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, 18. மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா, 19. குறளடி வஞ்சிப்பா, 20. சிந்தடி வஞ்சிப்பா, 21. புறநிலை வாழ்த்து மருட்பா, 22. வாயுறை வாழ்த்து மருட்பா, 23. செவியறிவுறூஉ மருட்பா, 24. கைக்கிளை மருட்பா என்னும் வகையானும்: 1.குறள்வெண்பா, 2. விகற்பக்குறள் வெண்பா, 3. நேரிசைச் சிந்தியல் வெண்பா, 4. இன்னிசைச் சிந்தியல் வெண்பா, 5. ஒரு விகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா, 6. இரு விகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா, 7. ஒரு விகற்ப இன்னிசைச் சிந்தியல் வெண்பா, 8. இரு விகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா, 9. ஒரு விகற்ப நேரிசை வெண்பா, 10. இரு விகற்ப நேரிசை வெண்பா. 11. ஒரு விகற்ப இன்னிசைவெண்பா, 12. பல விகற்ப இன்னிசை வெண்பா, 13. பல விகற்ப நேரிசை வெண்பா, 14. ஒத்த விகற்பப் பஃறொடை வெண்பா, 15. ஒவ்வா விகற்பப் பஃறொடை வெண்பா, 16. இன்னியல் நேரிசை ஆசிரியப்பா, 17. விரவியல் நேரிசை ஆசிரியப்பா, 18. இன்னியல் இணைக்குறள் ஆசிரியப்பா, 19. விரவியல் இணைக்குறள் ஆசிரியப்பா, 20. இன்னியல் நிலை மண்டில ஆசிரியப்பா, 21, விரவியல் நிலைமண்டில ஆசிரியப்பா, 22. இன்னியல் அடிமறிமண்டில ஆசிரியப்பா, 23 விரவியல் அடிமறிமண்டில ஆசிரியப்பா, 24. வெள்ளைச் சுரிதக நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, 25. அகவற்சுரிதக நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா. 26. அளவியல் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, 27. அளவழி அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, 28. அளவியல் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, 29. அளவழி வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, 30. கலி வெண்பா 31. வெண் கலிப்பா, 32. இயற்றரவு கொச்சகக் கலிப்பா, 33. சுரிதகத்தரவு கொச்சகக் கலிப்பா, 34. இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பா, 35. சுரிதகத்தரவிணைக் கொச்சகக் கலிப்பா, 36. குறைச் சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, 37. இயற் பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா. 38. குறைப்பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, 39. இயன் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, 40. அயன் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, 41. இன்னியற் குறளடி வஞ்சிப்பா, 42. விரவியற் குறளடி வஞ்சிப்பா, 43. இன்னியற் சிந்தடி வஞ்சிப்பா, 44. விரவியற் சிந்தடி வஞ்சிப்பா, 45. புறநிலை வாழ்த்துச் சமனிலை மருட்பா, 46. புறநிலை வாழ்த்து இயனிலை மருட்பா, 47. வாயுறை வாழ்த்துச் சமனிலை மருட்பா, 48. வாயுறை வாழ்த்து இயனிலை மருட்பா, 49. செவியறிவுறு உச்சமனிலை மருட்பா, 50. செவியறிவுறு இயனிலை மருட்பா, 51. கைக்கிளைச் சமனிலை மருட்பா, 52. கைக்கிளை இயனிலை மருட்பா என்னும் விரியானும்; (i) தாழிசை (ii) துறை (iii) விருத்தம் என்னும் தொகையானும், 1. வெண்டாழிசை, 2. வெண்டுறை, 3. வெளி விருத்தம், 4. ஆசிரியத் தாழிசை, 5. ஆசிரியத்துறை, 6. ஆசிரிய விருத்தம், 7. கலித்தாழிசை, 8. கலித்துறை, 9. கலிவிருத்தம், 10. வஞ்சித்தாழிசை, 11. வஞ்சித் துறை, 12. வஞ்சி விருத்தம் என்னும் வகையானும்; 1. வெண் செந்துறை, 2. குறட்டாழிசை 3. வெள்ளொத் தாழிசை, 4. வெண்டாழிசை, 5. ஓரொலி வெண்டுறை, 6 வேற்றொலி வெண்டுறை, 7. வெளிநிலை விருத்தம், 8. வெளிமண்டில விருத்தம், 9. ஆசிரிய ஒத்தாழிசை, 10. ஆசிரியத் தாழிசை, 11. ஆசிரிய நேர்த்துறை, 12. ஆசிரிய இணைக்குறட்டுறை, 13. ஆசிரிய நிலை விருத்தம், 14. ஆசிரிய மண்டில விருத்தம், 15. கலியொத்தாழிசை, 16. கலிந்தாழிசை, 17. கலித்துறை, 18. கலி விருத்தம், 19. கலி நிலைத்துறை, 20. கலி மண்டிலத்துறை, 21. கட்டளைக் கலித்துறை, 22. கலிநிலை விருத்தம். 23. கலிமண்டில விருத்தம், 24. வஞ்சிநிலைத் தாழிசை, 25. வஞ்சிமண்டிலத் தாழிசை, 26. வஞ்சிநிலைத் துறை, 27. வஞ்சிமண்டிலத்துறை, 28. வஞ்

சாமியின் கடைசிக் கடிதம்!

[தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் கொலை செய்யப்படுவதற்கு முதல்நாள் ஒருவருக்கு உதவி செய்யுமாறு ஆசிரியருக்கு எழுதிய கடிதம் இது. இதுதான் அவரது கடைசிக் கடிதம் என்று எண்ணுகிறோம். இந்தக் கடிதத்தில்கூட ஏழை ஒருவருக்கு உதவி செய்யுமாறு கேட்டிருக்கும் அந்தஏழை பங்காளனை எப்படி மறப்பது ?]

கே. வி. கே. சாமி — தூத்துக்குடி 19-9-56

செயலாளன்

நெல்லை மாவட்ட, தி. மு. கழகம்

அன்புள்ள அண்ணா, தங்கள் சாமி பணிவான வணக்கம்.

நண்பர் பூபதி அவர்கள் சென்னை வருகிறார். தங்களையும் காண்பார். அவருக்கு அவர் தொழில் முன்னிட்டு, தங்களால் இயன்ற உதவிசெய்யப் பணிவுடன் வேண்டுகிறேன். வணக்கம்

தங்கள்,

சாமி.

பனையும் பனிநீரும்

எண்ணெய்க் குடத்தை உற்று நோக்கின் உள்ளொரு உருவம் தெரியும் சலனமற்ற தெளிந்த நன்னீர் நிறைந்த குளத்திலோ கிணற்றிலோ தலையை நீட்டினும் அதுவும் வண்ணமுகம் காட்டும். உயர்மலையை அடுத்துள்ள வாவியில் மலையின் உரு நிழல் வடிவில் காணும். நீர் நிலைக்கண்மையில் எழுந்த வண்ண மாடிவீட்டின் வனப்பு நீலநீரில் பிரதிபலிக்கும். (வெனிஸ் நகரம் முழுதும் இப்படித்தானும்) இரு மருங்கும் நெருங்கி, தழைத்துத் தாழ்ந்து, ஓடும் நீரைத் தொடுவன போலவும் தொட்டும் தொடாதன போன்றும் கவிழ்ந்து சூழும் காவிரிக்கரை மரங்களும் நீரில் தன் எழிலுருவைக் காட்டி நிற்கும். பளிங்கின் முன் தன் படிக முகம் பார்க்கும் பாவையர் செயல் நாடோறும் நிகழ்வன. ஆனால் பன்னூறு ஆண்டுகட்கு முன்னரே ஒரு நுண்ணிய துளி நீரில் பேருருவைக் கண்ட சால்பு நம் பழம் பெரும்புலவரைச் சார்கிறது.

'எல்லாப் பொருளும் இதன்பாலுள. இதன்பால் இல்லாத பொருளும் இல்லையால்' என்று மதுரைத் தமிழ் நாகனாராலும் மற்றோராலும் போற்றிப் புகழப் பெற்று உலகே உணர்ந்து ஏற்கும் வான்புகழ் கொண்ட வள்ளுவரின் தெள்ளு தமிழைத் தமிழர் அறிவின் கருவூலமாகக் கொளல் வெள்ளிடைமலை.

ஊர்ப்புறத்துப் பிறந்து வதிந்ததாலோ அன்றி உற்றுநோக்கும் ஆற்றல்மிக்கிருந்ததாலோ அன்றியும் பிள்ளைமைப் பருவத்து தினைப் புனங்காவல் ஏற்றமையினாலோ என்னவோ தினைப்புனத்து வரப்பில் இருந்த பனையும் தினையும் வள்ளுவன் உள்ளத்தின் ஆழத்தில் பதிந்துவிட்டன. உவமானமாக மூன்று இடங்களில் கூறியுள்ளார். மேலும் தினை, பனை என்பன வழக்கில் உழலும்-நஞ்சை, புஞ்சை-போன்ற சொற்கள்.

(1) தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக் கொள்வர் பயன் தெரிவார்.

(2) தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் பழிநாணுவார்.

(3) தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும் காம நிறையவரின்.

இங்ஙனம் பல்லோராலும் புகழ்ந்து போற்றப்படும் வள்ளுவன் நூற்கு அணிந்துரை வழங்கிய ஆன்றோருள் கபிலரும் ஒருவர்.

பனைமரம் உயரத்திற்கு பெயர்பெற்றது - நீண்டு நிற்பது. அதன் உச்சியில் ஏறி நில நோக்கின் நடுக்கம் கொடுப்பது. அத்தகு பேருருவை அதனடியில் உள்ள புல்லின் நுனியில் முத்துவைத்தாற்போல அணி செய்து நிற்கும் பனித்துளியில் காண இயலும். அச்சிறு புல்நுனி நீர், அளவில் தினையரிசியினும் சிறியது. இருந்தும் நீண்ட பனையின் பேருருவைத் தன்னகத்தே படம் பிடித்துக் காட்டுகிறது. அஃதேபோல் இப்பேருலகின் உண்மைகளை வள்ளுவன் தன் சிறு குறளில் அடக்கிக் காட்டுகிறான்,-எல்லையில்லாப் பெருங்கடலைக் கண்ணின் கருவிழியால் காண முடிவதுபோல. குறள், உருவில் சிறிதேயாயினும் கருத்தில் மிகமிகப் பெரியது. கற்குந்தோறும், கற்று, நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும், புதிய புதிய இன்பத்தினையும் நல்குவது ஆக்கியோன் காலத்தே மட்டும் செல்வாக்கைப் பெற்று பிளிர்ந்ததோடன்றி, அவன் மறைந்தாலும் தான் மறையாது, என்றும் நின்று நிலவுவது. அணிந்துரையில் கபிலர் அழகாகக் கூறுகிறார். ஆடவர் நெல்லைக் குத்தும் உலக்கைப் பாட்டைக் கேட்டுக் கொண்டே வீட்டில் வளரும் பறவைகள் தூங்கும் வளநாட்டரசனே, தினையரிசியின் அளவுக்கும் போதாத, சிறு புல்லின் நுனியிலுள்ள நீர்த்துளி, நீண்டு உயர்ந்த பனைமரத்தின் உருவத்தைத் தன்னுள் அடக்கிக் காண்போருக்குக் காட்டுதல் போலத்தான் வள்ளுவனது எளிய குறட்பாவை விரித்துச் சொல்லுதல்.

"தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தான்-மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி"

(வள்ளை - உலக்கைப் பாட்டு.) (அளகு - பறவை)

நான்கு வரிகளில் ஒரு ஆடு முன்னிலையாக அரசனை விளித்தல். நாட்டு வளப்பம் கூறல், நெல்குத்தும் பெண்கள் உலக்கை ஒலியோடு எழுப்பும் ஒரு இனிய பாட்டைக் (வள்ளை) (ஏற்றப் பாட்டைப் போன்றதொரு இசை) கூறல் எல்லாவற்றிற்கும் மேலாக விஞ்ஞானம் தோன்றாக் காலத்தே, ஒரு அழகிய உவமான உண்மையைக் கூறல் எவ்வளவு அறிவாற்றல் மிக்கு மிளிர்கிறது. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலில் வள்ளுவன் தலையாயவன் எனின் கபிலர் அடுத்தபடி போலும்.

— [illegible]

ஐதர் காலத்தில்...!

இந்தியாவில் ஐதர் அலி செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் ரிச்சர்டு என்ற ஆங்கிலேய டாக்டர் ஒருவர் இந்தியாவுக்கு வந்தார். அவர், பாண்டிச்சேரி, கோவா முதலிய இடங்களில் சுற்றி அலைந்துவிட்டு பெங்களூர்ப் பகுதிக்கு வந்தார். வெள்ளையரை எதிர்த்திருக்கும் திப்புவின் ஆட்சியையும், ஐதரின் செல்வாக்கையும் கவிழ்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் இந்தியாவுக்கு வந்த அந்த டாக்டர் எப்படியோ திப்புவின் அன்பைப் பெற்று விட்டார். அதோடு, அவர் விரைவிலே திப்புவுக்குத் திவானாகப் போவதாகவும் நகரில் பேச்சுக் கிளம்பியது.

ஐதருக்கு இந்தச் செய்தி எட்டியது. "யார் அந்த ரிச்சர்டு?" என்று சிந்திக்க ஆரம்பித்தான். ஆனால் அதற்குள் திப்புவின் தனி அலுவலகத்திலிருந்து ஒரு கட்டளை பிறந்தது. அதன்படி அந்த ரிச்சர்டு திப்புவுக்குத் திவானாக நியமிக்கப் போவதாக ஒரு அறிக்கை வெளியானது. ஐதருக்கு மூளை குழம்பியது. தன்னுடைய மகன் தனக்கு ஒரு திவானை நியமித்துக் கொள்வதைக் கண்டித்து அந்த உத்தரவை ரத்து செய்தால் திப்புவுக்கு நாட்டில் மரியாதை இல்லாது போய்விடுமே என்று கவலைப்பட்டான் ஐதர் அலி.

அன்று அந்த வெள்ளை டாக்டர் பதவியேற்கும் நாள். அலங்கரித்திருந்த மண்டபத்திலிருந்து திப்பு அந்த டாக்டரைப் பற்றிப் புகழ்ந்து பேசி அவரைப் பதவி யேற்கும்படி கேட்டுக் கொண்டான். அப்போது ஒரு கிழவன் எழுந்து, 'ஐதர் நீதி தவருதவன்!" என்று கூவினர். திப்புவுக்குக் கோபம் வந்துவிட்டது. அந்தக் கிழவனை சபைக்கு முன் இழுத்து வரச் சொன்னான். கிழவன் திப்புவின் முன் வந்தார். திப்புவால் ஒன்றும் பேச முடியவில்லை. காரணம் அந்தக் கிழவர் தான் ஐதர். திப்பு நடுங்கினன்.

"பயப்படாதே! உன் இஷ்டப்படி உத்தரவிடு" என்று தைரியம் சொன்னான் ஐதர்.

திப்பு மறுபடியும் சிறிது பேசி, அந்த டாக்டரைப் பதவி ஏற்கச் சொன்னான். அரண்மனை யானை சபைக்கு வந்து அந்த டாக்டரைத் தூக்கி ஆசனத்தில் அமர்த்தி பூமாலையைச் சூட்டியது. சபையில் கரகோஷம் எழுந்தது. அடுத்த கணம் சபையில் கூக்குரல் கேட்டது. ஏன்? அந்த யானை, தூக்கி வைக்கப் பட்ட அந்த வெள்ளையனை ஒரேயடியாகத் தரையி லடித்துக் கொன்றுவிட்டது.

ஐதர் சிரித்தான்! "கலங்காதே திப்பு! உன் உத்தரவும் நிறைவேறியது! நான் கொடுக்க வேண்டிய தண்டனையையும் கொடுத்து விட்டேன்" என்று கூறி அந்த ரிச்சர்டு அடுத்து நடத்த இருந்த சூழ்ச்சித் திட்டத்தையும் சபையில் ஆதாரத்தோடு விளக்கினன் ஐதர். சபை பெருமூச்சுவிட்டது.

—தமிழ்ப்பித்தன்.

விற்பனையாகிறது!

வாணிதாசன் எழுதிய

எழிலோவியம் 0-12-0

தமிழச்சி 1-0-0

வாணிதாசன் கவிதைகள் 2-0-0

★

தயாராகிறது

எஸ். எஸ். தென்னரசு எழுதிய புதிய

நாடகங்கள்

தலைநகரம் 1-8-0

மணிக்கூண்டு 1-8-0

வெள்ளி விழா 1-8-0

செம்மாதுளை-நாவல் 1-4-0

★

மலர் நிலையம்

133 பிராட்வே, சென்னை-1.

எங்களிடம் கிடைக்கும் புத்தகங்கள்

புலவர் மருதவாணன் எழுதிய

நமது மொழி தமிழ் ரூ 1-0-0

மணமக்களுக்கு ரூ 1-4-0

எஸ். பி. இராமச்சந்திரன் எழுதிய

அன்னகிளி ரூ 2-0-0

டாக்டர் எஸ். ஏ. சஞ்சீவி எழுதிய

வாழ்க்கைக் கலை ரூ 1-0-0

ஏ. வி. பி. ஆசைத்தம்பி எழுதிய

கேட்கவில்லை ரூ 0-10-0

அறிஞர் அண்ணா எழுதிய

குமஸ்தாவின் பெண் ரூ 1-0-0

சு. புவியரசு எழுதிய

திருமணப் பரிசு ரூ 1-4-0

தஞ்சை புலவர் எழுதிய

வாழ்க்கைப் பூங்கா ரூ 1-8-0

குறிப்பு:—'தென்றல்' விற்பனையாளர்களுக்குச் சலுகை உண்டு. திருமணப்பரிசுகளுக்கென மாதம் ஒரு புத்தகம் வெளிவருகிறது.

— விபரங்கட்கு —

சி. கே. ஆறுமுகம்

பெரியகடை வீதி

கோயமுத்தூர்.

பிரிவினை அல்ல

— 2-ம் பக்கம் தொடர்ச்சி —

துண்டாடுவதாகும்? எப்படி காந்தியத்திற்கு முரணானதாகும் பாரதமாதாவின் புதிய புதல்வர்கள் இதற்கு சமாதானம் கூற மறுத்துவிடுகிறார்கள். ஒரே வரியில், 'திராவிடர்கள்' என்பது வெளி நாட்டுக்காரர்கள் எழுதி வைத்துவிட்டுப் போனது என்று சொல்லி விடுகிறார்கள். இந்த மறுமொழி எல்லா வாதங்களையும் பலம் குறையச் செய்து விடும் என்று அவர்கள் நம்புகிறார்கள். தேசிய இளைஞர்கள் கூட அப்படித்தான் கருதுகிறார்கள். வெளி நாட்டுக்காரர்கள் எழுதி வைத்ததாம். சர்மா சாஸ்திரிகளை, அய்யர் அய்யங்கார்களை சற்று ஒதுக்கிவிட்டு வெள்ளையர்கள், ஜர்மானியர்கள் சொல்லியவற்றை எடுத்துக் கொண்டாலும் தவறென்று மில்லையே! ஒரு நாட்டு வரலாறு என்பது பிறநாட்டுக்காரர்கள் எழுதுவதுதான் என்ற மூல சூத்திரத்தை படித்த காங்கிரஸ் நண்பர்களே அடியோடு மறந்துவிடுகிறார்கள்.

பாகியோன் ஒரு சீனத்துப் பாதசாரி—அவன் சந்திரகுப்தரின் அரசியலைப் பற்றிப் புகழ்ந்துவிட்டான் என்பதைக் கண்ணில் ஒத்திக் கொள்பவர்கள்,

அல்பெருனி என்ற பாரசீகப் பாதசாரி, இஸ்லாமிய வேந்தனும் கஜினி முகமதுவின் ராஜ்யக் கொள்கையைக் கண்டித்தான் என்பதற்காக அவன் இந்தியாவைப் பற்றி எழுதியுள்ளவற்றை தினம் தினம் நினைத்துப் பார்த்து நெஞ்சு மகிழ்பவர்கள்,

மார்க்கோ போலோ என்ற வெனிஸ் நகரத்துப் பேர்வழி, இந்தியாவின் நிலைபற்றி எழுதியதை மனப்பாடம் செய்வித்து பூரிப்பவர்கள்,

இபன் படூடா என்ற ஆப்ரிக்கத் தோழர் டில்லியைப் பற்றி வர்ணித்திருப்பதை படித்துப் பெருமைப் பட்டுக் கொள்பவர்கள்.

காமெல்லி கராரி என்ற இத்தாலியப் பிரயாணி, ஔரங்கசீப்பின் சேனை, ஒழுக்கக் குறைவால பலம் குன்றியது என்று எழுதியதை 'அது உண்மைதான்' என்று தங்களுக்குத் தாங்களே வழிமொழிந்து கொள்பவர்கள்—திராவிடர்கள் என்ற இனம் தென்னிந்தியாவில் தனி ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தது என்று வெளி நாட்டு ஆராய்ச்சியாளர்கள் எழுதியிருப்பதைப் படித்து, அது வெளி நாட்டுக்காரன் எழுதி வைத்ததல்லவா என்கிறார்கள்.

பாகியோன்!
அல்பருனி!
மார்க்கோ போலோ!
இபன் படூடா!
காமெல்லி கராரி!

—இவர்களெல்லாம் யார்? மாம்பலத்தில் பிறந்து, மைலாப்பூரில் பெண்ணெடுத்தவர்களா? இவர்களின் எழுத்துக்கள் மட்டும் எப்படி பாடப் புத்தகத்திற்கு வந்தன? இந்த உண்மைகளை, அதற்கு உரிய இடத்தில் உட்கார்ந்து பேசுவதற்குத்தான் தி.மு. க. தேர்தலில் நிற்க முன் வந்திருக்கிறது.

எஸ். எஸ். தென்னரசு

வருந்துகிறோம்

தமிழகத்தின் புகழ்பெற்ற டைரக்டர் **கே ராம்னாத்** அவர்கள் 3-10-56 அன்று திடீரென்று இயற்கை யெய்திய செய்தி கேட்டு பெரிதும் வருந்துகிறோம். அவருடைய மறைவு தென்னாட்டின் கலையுலகிற்கு ஈடு செய்யமுடியாத இழப்பாகும்.

அன்னாரைப் பிரிந்து தவிக்கும் அவரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருப்புத்தூர் சின்னதுரை மறைவு

சுயமரியாதை இயக்க காலத்தில் 'அதில் நீங்காப்பற்றுக் கொண்டு உழைத்தவரும், தி. மு. கழகத்தின் வளர்ச்சியில் பெருத்த அக்கரை காட்டியவரும், எத்தகைய ஆஸ்திக வாதங்களையும் நொடிப்பொழுதில் சிதைத்து புறமுதுகிடச் செய்யும் பேச்சாற்றல் பெற்றவருமான இராமனுதபுரம் திருப்புத்தூர் **எஸ் சின்னதுரை** அவர்கள் 5-10-56 பகல் 2 மணிக்கு தமது இல்லத்தில் காலமானார் என்ற செய்தி கேட்டு துக்கப்படுகிறோம். அவரது பிரிவால் வாடும் அவரது குமாரர்கள் சி. பீர்முகமது, அமீது ஆகியோருக்கும். அவரது குடும்பத்தினருக்கும் நமது துக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம் (ஆர்)

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

பணம் அனுப்பவேண்டும். சேர்த்து அனுப்புவது சிக்கலை வளர்க்கும். ஆசிரியர் பெயருக்கோ, 'மானேஜர்' முகவரிக்கோ அனுப்பக்கூடாது. 'செக்', 'டிராப்ட்' முதலியவற்றிலும் **'Prop. Thendral'** என்றே குறிக்க வேண்டும்.

அதன்றியும், நண்பர்களும் ஏசண்டுத் தோழர்களும், முந்திய நிர்வாகத்திற்குப் பணம் அனுப்பிய குறிப்புக்களையும் ரசிதுகளையும் பத்திரமாக வைத்திருக்கக் கேட்டுக் கொள்கிறேன். அலுவலகத்திற்குத் தேவைப்படும்போது அவற்றை அனுப்பித்தரக் கோருகிறேன்.

நண்பர்கள் வெளியூர் 'செக்' அனுப்பினால், அதை மாற்றுவதற்கான செலவு போக, பாக்கியுள்ள பணம் மட்டுமே வரவு வைத்துக் கொள்ளப்படும்.

அண்ணன் இராம. சுப்பையா அவர்களைத் தவிர வேறு யாரிடமும் நண்பர்கள், தென்றலுக்காகவோ முல்லைக்காகவோ பணம் செலுத்தக்கூடாது. அப்படிச் செலுத்தப்படும் பணத்திற்கும் அலுவலகத்திற்கும் ஏதும் தொடர்பு இடையாது.

வெகுமதி

நண்பர்கள் அனுப்பும் கதை கட்டுரை கவிதைகளுக்கு, தரத்திற்கு ஏற்றாற்போல் வெகுமதி வழங்கப்படும். அதனால் எழுதும்போது, மற்றைய பத்திரிகைகளிலிருந்து மாறுபட்டுத் தோன்றும்படியான புதுமைக் கருத்துக்களை மட்டுமே தென்றலுக்கும், முல்லைக்கும் எழுத வேண்டுகிறேன். 'சோலையில் கண்ட காதலி' பற்றிய கவிதைகள், புளித்துச் சலித்துப் போய்விட்டன. அதிலும் புரட்சிக் கவிஞர் கையாண்டு வெற்றிபெற்ற எண்சீர் விருத்தத்திலேயே அனைவரும் அனைத்தையும் எழுதுவதை நான் விரும்பவில்லை. ஆகவே, தென்றலுக்கோ முல்லைக்கோ எழுதும்போது, கருத்தளவுக்கு நடையிலும் நுலம காணக் கோருகிறேன்.

— ஆசிரியன்

(சென்ற இதழ்களின் தொடர்ச்சி)

சிந்தைதவிழி எல்லாமும் அவனின் பின்னே
திணறிவரும் பெருமூச்சும் அவன்பின் னாலே
சந்திரனுக் கிளையமகன் உடலம் மட்டும்
சாளரத்துச் சீலையின்முன் சிலையைப் போலே!
கந்தமலர் தென்றலுக்கும் அசையா தாகக்
கார்பொழியும் நீர்விழியிற் பொழிந்து நிற்கும்
இந்தநிலை காணுமற் பாண்டி நாடன்
“என்னுடு வாழ்க!” வெனப் போனான்! போனான்!

எப்பொழுதும் அருகிருக்கும் பணிப்பெண் கூட்டம்
இளங்கனியின் பின்வந்து தோளைத் தொட்டு(க்)
கைப்பிடியிற் பள்ளியறை சேர்க்கும்; அன்னாள்
கார்குழலிற் கைநீவி ஆற்றப் பார்க்கும்!
அப்பொழுதும் தொலைகிறதா பிரிவின் ஏக்கம்?
அடுக்கடுக்காய்ப் பின்தோன்றும் அலைகள் போலே!
செப்பரிய பேரழகிற் படருந் தீயைச்
சிறுவிசிறி ஆற்றுமென விசிறும் பெண்கள்!

போர் முகத்தில்!

கொட்டின முரசம் கூவின படைகள்!
கொதித்தெழுந் தோடின பரிகள்!
வெட்டிய தலைகள் வெங்குரு தியிடை
மேவின மீனவர் அடிகள்!
பட்டன கணைகள் [1]பண்டன முருவிப்
பாய்ந்தன மீட்டொரு பகையில்!
விட்டனர் மீனர்; வீழ்ந்தனர் சேரர்
வெங்களஞ் செந்நிறம் படியும்!

[2]பரிகலங் கடலிற் படர்கலம் போலப்
பாய்ந்தது செந்நிறக் கடலில்!
சுரிகையும் பிறவும் சுமப்பவ ரின்றித்
தூங்கின சாய்ந்தவ ரடியில்!
இருகரம் தாங்கும் எளியவா ளோடும்
என்னவர் காட்டிய துணிவு!
சிறுமனச் சேரன் உறவினர் பலரும்
தேய்ந்தனர் மண்ணகஞ் சேர்ந்து!

அந்தியம் பகைக்கு வந்தவென் பது போல்

அந்தியிற் செங்கதிர் அடையும்!
சிந்திய உதிரச் சிவப்பெலாம் வானச்
செக்கரில் மின்னுறப் படியும்!
முந்திய விண்மீன் முறுவலெம் மீனர்
முகமலர் இதுவெனப் புகலும்
சந்திரன் நடவா வானகம் எங்கள்
தமிழவன் வாள்பட ஒளிரும்!

1. கவசம். 2. படைகள்.

செத்தவர் குறையத் தேய்ந்தவர் சூழ,
சேரலன் சிந்தையில் ஆழ்ந்து
கத்துவர் தாபம், கதறுவர் ஓலம்
காதிடை மோதுறக் கரைவன்
இத்துயர் படரச் செய்தவன் யானே
என்றுளந் தேரா னாகி
மெத்தவும் வருந்தி வியர்த்தனன் மேனி
வேதனைக் கோழைமை தோன்றும்!

- வேறு -

வில்லவன் வல்லா னென்பர்
வெங்களத் திடையில் நின்று
மல்லெலாம் இழந்தான் போன்றே
வருந்தினன்; பிறரைத் தூண்டும்
வல்லவன் வேத நாதன்
“வாடுவ தேனோ மன்னா?
கொல்புலி யன்னான் காஞ்சிக்
கொற்றவன் தன்னைக் கேட்போம்!

இல்லையென் னுரையான்” என்றான்
ஏறிட்டுப் பார்த்த கோதை
தொல்லையை வளர்க்கத் தூண்டும்
சூரனை, “நாம்போய்க் காஞ்சி
எல்லையை மிதியா முன்பே
ஏறிடும் மீனன் தானே!
வல்லியம் போல்வான் பின்னர்
வந்துதான் என்னும்?” என்றான்!

“வெண்கொடி வீசிப் பாண்டி
வேந்தனை அழைத்தால் அன்னான்
தன்கொடி பறக்கத் தேரில்
தனியனாய் வருவான்; கண்கள்
மின்னிமைத் திடுமுன் னாலே
வீழ்த்துவர் ஒற்றர்; பின்னர்
தென்னவன் கூடல் நோக்கிச்
சிதறிடும் படைகள்!” என்றே

ஆரியன் உரைத்தான்; சேரன்
ஆத்திர மிகுத்தான்; “சிச்சீ
சூரியன் திசையே மாற்றித்
தோன்றினும் பின்போய்த் தாக்கும்

காரியம் புரியேன் இந்தக்
காசினி யுளநாள் மட்டும்!
சேரலன் நெறியான் என்றே
செத்தொழிந் தாலும் நன்றாம்!”

என்றனன் கோதை, வெற்றி
ஏட்டினன் நகைத்தான்; “சேர!
கொன்றழி வெய்திப் பாண்டிக்
கொற்றவன் காலில் வஞ்சி
சென்றதென் றாலுன் நாமம்
சிரிப்பினுக் கிடமா காதோ?
இன்றதை ஏற்றா லென்ன;
இருக்குமே ஆவி யேனும்?

சிந்தனைக் கதவைச் சாத்து!
செய்கையே அரசைக் காக்கும்!
நிந்தனை பெரிதா? ஏட்டு
நெறிகள்தான் வாழ்வா! உன்னைக்
கொந்தகன் எனவே நம்பிக்
குடியினர் வாழும் போது,
உன்தனிக் கொள்கை ஒன்றும்
உயர்வல!” என்றான் வேதன்!

“மானமே உயிராம்! நீங்கி
வாழ்வதேனோ தென்னன்? வேத!
ஈனமே தொழிலாய்க் கொண்டார்
இயைவர்நான் இயையேன்!”னென்று
மோனமிட் டுரைத்தான் சேரன்;
மூட்டிய கனலை மீட்டும்
தானமாய் வாங்கிப் போனான்
சதியிலே பிறந்தான் மைந்தன்!

போனவன் மீண்டும் நின்று
புன்னகை சொரிந்தான்; சேர
மானவன் அவனைப் பார்த்து
“வழிஇது! போவாய்! போதும்!
மீனவன் பகையே உன்னால்
விளைந்ததே! உன்னைக் கேட்டு
நானவன் உயிரை வாங்க
நடந்திடேன்! இழியோய்! செல்க!”

இப்படி மொழிந்தான்; அந்த
இடுப்பொடிக் குஞ்சொற் கேட்ட
செப்படு வித்தைக் காரன்
திரும்பினன்; நடந்தான்! நூலைக்
கைப்பிடித் தன்னான் போகக்
களிற்றினைக் கோதை எண்ணத்
தைப்பிடித் தெழுந்தான்; (செய்வ(து)
இன்னதென் றறியா தோய்ந்தான்

நள்ளிரா வேளை—பொல்லா
நாய்நரி உலவும் போழ்து!
உள்ளிராப் படர்ந்தான், மெல்ல
ஒருவரும் அறியா வண்ணம்
கள்ளர்போல் நடந்தான்; சூழ்ந்த
காட்டினுள் நுழைந்தான்; காலில்
முள்ளெலாம் துணையா ராட்ட
மூன்றுகல் தூரம் போனான்.

(தொடரும்)

லாஸ்கியின் 'பொது உடைமை'

தமிழில் :

பன்மொழிப்புலவர்

கா.அப்பாதுரை. M.A.L.T

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

1871-க்கும் 1915-க்கும் இடைப்பட்ட காலத்தில் மிதவாதச் சீர்திருத்தமே மேலோங்கிற்று. 1889-ல் கூடிய இரண்டாவது உலகத் தொழிலாளர் கூட்டமைப்பு பெயரளவிலேயே சமதரும மார்க்ஸியப் பதங்களை மேற்கொண்டது. ஆயினும் தீவிரக் கட்சியொன்று வளர்ந்துகொண்டேதான் வந்தது. மிதவாதக் கட்சிகளுக்கு ஜெர்மனியின் பெரும்பான்மைக் கட்சியான தேசிய சமதரும (நாஜி)க் கட்சியும், தீவிரக் கட்சிக்கு ரஷ்யாவில் லெனின் தலைமையிலுள்ள பெரும்பான்மைக் கட்சியான போல்வெவிக் கட்சியும் முதன்மை வகித்தன.

1915-ல் ஸிம்மர்வால்டியில் மிதவாதக் கட்சி கூடிப் பெயளரவில் போரைக் கண்டித்தது. அடுத்த ஆண்டில் தீவிரக் கட்சி கீந்தாலில் கூடிப் பொதுவுடைமைத் தத்துவப்படி போரை ஏகாதிபத்திய முதலாளித்துவப் போட்டி என்று குறிப்பிட்டு உடனடி அமைதி கோரிற்று. ரஷ்யப் பொதுமக்கள் ஒருபுறமும் உலகத் தொழிலாளர் மற்றொருபுறமும் போரைப் பெரிதும் வெறுத்திருந்தனர். ஐரோப்பிய வல்லரசுகளும் மிதவாதிகளும் போரெதிர்ப்பை அசட்டை செய்ததனால், தீவிரப் பொதுவுடைமைக் கட்சி விரைவில் ரஷ்யாவின் மக்களாதரவு பெற்ற தேசியக் கட்சியாகவும், ஐரோப்பாவில் தொழிலாளர் வகுப்பின் ஆதரவு பெற்ற உலகக் கட்சியாகவும் வளர்ந்தது.

ரஷ்யாவில் பொதுவுடைமைக் கட்சியின் வெற்றிகள் பெரிதும் தேசிய வெற்றிகளும் அரசியல் வெற்றிகளுமே. பொதுவுடைமை நோக்கிப் புரட்சிப் பாதையில் சென்ற அதன் தொடக்க ஆர்வம் தேசத்தின் சூழ்நிலைகள் காரணமாகவே ஓரளவு தடைப்பட்டுள்ளது. ஆயினும் ரஷ்யாவின் தேசிய முன்னேற்றத்தை இது தடுக்கவில்லை. ரஷ்ய மக்கள் ஆர்வம் இத்தடைகளை மீறி வளரும் என்பது உறுதி. உலகப் பொதுவுடைமை இயக்கமும், சமதர்ம இயக்கமும் இதனால் புத்தாக்கம் பெற்றுள்ளன என்பதில் ஐயமில்லை.

வரலாற்றின் பொருண்மைவாத விளக்கம்

வரலாற்று நிகழ்ச்சிகளைத் தொடர்பான ஒரு ஆற்றலாகக் கருதுவது புதிதல்ல. ஆனால் வரலாற்றை இயக்கும் ஆற்றலை ஒரு அக ஆற்றலாக, அதாவது தெய்விக ஆற்றலாக அல்லது சமயம், பகுத்தறிவு விடுதலை ஆகிய உயர் பண்பாற்றல்களாகவே பாஸுவெட், பிட்டெ, தெமயிஸ்தர் முதலியவர்கள் கருதினர். மார்க்ஸ் அவ்வாற்றலை ஒரு புற ஆற்றல் என்றேகருதினார்.

உலகை இயக்கும் ஆற்றல் உலகு கடந்த ஓர் அக ஆற்றலன்று; உலகிலேயே உள்ள புற ஆற்றல்கள் தான் என்பது பொருண்மை வாதம் (மெட்டிரியலிசம்). இதன்படி உயிர்ப்பண்புகள், மனிதன் எண்ணங்கள், கருத்துக்கள், செயல்கள் ஆகியவற்றால் உலகம் நடைபெறவில்லை. உலகின் சூழல் காரணமாகவே அவை எழுகின்றன. வரலாற்றை விளக்க ஹெகெல் பொருண்மை வாதத்தை முன்பே பயன்படுத்தியதுண்டு. சமூகப் பண்புகளை சில இயற்கூறுகளின் விளைவுகளாகக் காட்டவும், நிகழ்ச்சிகளைச் சமூகப் பண்புகளின் விளைவுகளாகக் காட்டவும் அவர் முயன்றதுண்டு. ஆனால் மார்க்ஸ் அவர் முடிவுகளை ஏற்காமல், அவர் முறையைப் பயன்படுத்திப் புது விளக்கங் கண்டார்.

புற உலகின் சூழல்களும், அவற்றால் ஏற்பட்ட அனுபவங்களுந்தான் மனிதன் கருத்துகளை இயக்குகின்றன என்பதை ஆராய்ச்சியில்லாமலே எவரும் ஏற்றுக்கொள்வர். ஆனால் மார்க்ஸ் இந்நிலை கடந்து ஒருபடி மேற்சென்றார். பொதுக் கூறுகளிடையே ஒவ்வொரு காலத்திலும் மற்றெல்லாக் கூறுகளையும்விட மனித சமூகத்தை உருவாக்கும் முனைத்த கூறு பொருள்களின் உற்பத்தி முறையே என்று அவர் கொண்டார். இவ்வுற்பத்தி ஆற்றலே சில சமூக சக்திகளை இயக்கி, அவற்றின் மூலமாக அவ்வக்கால சமூக அமைப்புக்களையும் கருத்துக்களையும் உண்டு பண்ணுகின்றது. அவையே ஒழுக்க முறைகள் என்றும், அரசியல் முறை என்றும், சமய விதிகள் என்றும் வழங்குகின்றன. மார்க்ஸின் மொழிப்படி, "மனிதர்கள் தம் வரலாற்றைத் தாமே ஆக்குகின்றனர் என்பது உண்மைதான். ஆனால் அவ்வேலையை அவர்கள் தாமே தம்மிச்சைப்படி தேர்ந்தெடுத்துக்கொண்ட சூழலிடையே செய்யமுடியாது. ஏற்கனவே அமைந்துவிட்ட சூழலிடையேதான் செய்யவேண்டும்."

மார்க்ஸின் இவ்விளக்கம் மறுக்கக் கூடியதன்று. எடுத்துக்காட்டாக, நிலப் பண்ணையாட்சி முறை சமூகத்திலுள்ள அமைப்புக்கள் யாவும், சமூகத் தொடர்புகள் யாவும், நிலப்பண்ணை ஆட்சியாளர்களின் நலன்களுக்கேற்ப உருப்படுத்தப் பட்டிருந்தன. சமத்துவப் பேச்சுப் பேசிய சமயத் துறைகூட அதற்கு எளிதில் வளைந்து கொடுத்து அதன் படிமுறை உரிமைகளை ஏற்றுக்கொண்டது. இவ்விடைக்கால சமூக அமைப்புக் குலையும்போது அரசியலும் குலைந்து, நடுத்தர வகுப்பாட்சி அரசியல் ஏற்பட்டது. புதிய ஆட்சியுடன் பழைய சட்டங்கள், அமைப்புக்கள், கருத்துக்கள் யாவும் மாறின. எங்கும் கூட்டுறவினிடமாகத் தனி மனிதனுரிமை வற்புறுத்தப்பட்டது. சமயத்துறையில் இதுவே உரோமத் திருத் தந்தை (போப்) ஆட்சியினிடமாகப் புதிய சீர்திருத்த சமயத்தை வளர்த்தது. புதிய சமூக ஆட்சிக்குத் தடங்கலாயிருந்த இடைக்காலக் கடுங்கோலர் (வல்லரசர்) கூடத் தூக்கி எறியப் பட்டனர்.

ஒவ்வொரு வரலாற்றுக்காலச் சமூக அமைப்புக்கு மட்டும் மார்க்ஸின் பொருண்மை வாதம் விளக்கந் தரவில்லை. காலாகால மாறுபாடுகளையும் அது இம்முறையிலேயே விளக்கிற்று. புற உலகச் சூழல்கள் என்றும் நிலையாயிருப்பதில்லை. புதிய விற்பனைக் களங்கள், புதிய தொழில் முறைகள், புதிய மூலப்பொருள் வளங்கள் தோற்றுகின்றன. புதிய அமைப்பு முறைகள் எழுகின்றன. இவற்றின்மூலம் பழைய அடிப்படை அமைதி காலங் கடந்ததாகிவிடுகிறது. மாறுதல் சக்தி நீக்க முடியாத கட்டாய வலு அடைகிறது. அதன் ஆற்றலால் வகுப்புக்கள், வகுப்புகளின் உயர்வு தாழ்வு முறைச் சட்டங்கள், சமூக அரசியல் அமைதிகள், சமய அமைப்புகள், கருத்துக்கள் யாவும் தகர்ந்து பொடிந்து புதுப் போக்குக்கு இணங்க உருவாகின்றன.

திரு. பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் இவ்வகையில் பல நல்ல சான்றுகள் தந்துள்ளார். பிளேட்டோவின் காலத்திலிருந்து பெண்ணுரிமை பேசப்பட்டும், மேரி ஓல்ஸ்டன் கிராஃவட், ஜான் ஸ்டுவர்ட் மில் ஆகியவர்கள் அதற்காகத் தீவிரப் பிரசாரம் செய்தும் ஏற்படாத பயன், தொழில் துறையில் பெண்கள் புகுந்ததும் உடனே விளைந்தது. 16-ம் நூற்றுண்டில் சமயச் சீர்திருத்த இயக்ககாலமுதல் 1688-ல் நிகழ்ந்த ஆங்கில நாட்டுப் புரட்சி வரை ராபர்ட் ப்ரௌன் போன்ற அறிஞரும், வில்லியம் அவ் ஆரஞ்சு போன்ற அரசியற் சான்றோரும் எவ்வளவு முயன்றும் கைவரப் பெறாத சமய சமரச மனப்பான்மை, தொழில் துறை வளர்ச்சிக்குச் சமயப் பூசல் குந்தகம் ஆகும் என்பது உணரப்பட்டவுடனே வெற்றி பெற்றது.

மார்க்ஸிய பொருண்மை வாதத்தின் மூன்றாவது கூறு வகுப்புப் போராட்டக் கோட்பாடுக்குத் தனி ஊக்கம் தருவது. பழைய அமைப்பு மாறிப் புது அமைப்பு வரும்போதெல்லாம், அது இயல்பாக, சுமுகமாக வந்துவிடுவதில்லை. புதுமை பழமையுடன் கடும் போராட்டமாடியே வெற்றியடைய முடியும். எனவேதான் ஒவ்வொரு சமூக அமைப்பிலும் நாம் இருவகையான மக்களைக் காணலாம். ஒரு சாரர் ஏற்கனவே நிலைபெற்றுள்ள அமைப்பை ஆதரித்து நிற்பர். மற்றொரு சாரர் அதை மாற்ற ஆர்வங்கொள்வர். முதல் வகுப்பு பெரும்பாலும் ஏற்கனவே நிலைபெற்ற அமைப்பில் உரிமையாட்சியுடையதாகவும், மற்ற வகுப்பு அதனைச் சார்ந்து வாழ்ந்து உரிமையற்றதாய், கடமையாற்றுவதாகவுமே இருப்பது காணலாம். ஆனால் உரிமை வகுப்பு தன் தனி நலன்களையே மொத்த சமூக நலன் என்று அந்த அமைப்பு முறையில் கூற முடிவதால், வகுப்பு வாதம் பேசாமலே அது சமூக அடிப்படையில் பேசித் தன் நலன்களை எளிதில் அடையும். உரிமையற்ற வகுப்பின் எதிர்ப்பை அது மொத்த சமூகப் பகைமை என்று கூறிச் சட்டப்படி தண்டிக்கும். ஏனெனில் சட்டம், கல்வி, ஒழுக்கம், நேர்மை கடவுள் கொள்கை ஆகிய யாவுமே அவ்வச் சமூக அமைப்பு முறையில் அதனதன் ஆட்சிக் குழுவினரால் அமைத்துக்கொள்ளப்பட்டு அவரவர்கள் நலன்கள் சார்ந்தவையாகவே இருக்கும்.

மார்க்ஸின் வகுப்புப் போராட்டக் கொள்கை இங்ஙனம் அவர் வரலாற்று விளக்கத்திலிருந்து ஆதரவு பெறுகிறது. ஒவ்வொரு வகுப்புப் போராட்டத்திலும் உடைமை வகுப்பு அதாவது ஆட்சி வகுப்பு நிழலிலிருந்தும்; கடமை வகுப்பு அல்லது ஆளப்படும் வகுப்பு தன் வாழ்க்கைப் பிழைப்புக்காகத் தன் உரிமைப் போராட்டத்தில், இறங்குவதற்கான சூழ்நிலையாதரவற்றுக் கடுவெயிலில் நின்றும் போராட வேண்டியிருக்கிறது. இந்நிலையிலும் புதிய சூழல் கடமை வகுப்புக்கு வலுத் தருகிறது. ஆனால் போராட்டமில்லாமல் அவ்வகுப்பின் உரிமை பெறமுடியாது. ஆதிக்க வகுப்பின் நல்லெண்ணத்தையோ, சலுகையையோ எதிர் பார்ப்பதும் மதிப்பதும் தவறு. ஏனென்றால் சலுகை தற்காலிகமாக ஆதிக்க வகுப்புக்கு ஏற்பட்ட சிறு தளர்ச்சிகளையே காட்டுகிறது. அத்தற்காலிக ஓய்வை நிலையான அமைதியாகக் கருதினால் ஆதிக்க வகுப்பு அதைப் பயன்படுத்தித் தன்னைப் பின்னும் எளிதில் வலிமைப்படுத்திக் கொள்ளும். கடமை வகுப்பு அதாவது உழைப்பு வகுப்பு இதனாலேயே சம்பள உயர்வு, வேலை நேரக் குறைவு முதலிய சலுகைகளைத் தன் நோக்கமாகக் கொள்ளாமல், போராட்டத்தின் படிகளாக மட்டுமே கொள்ள வேண்டுமென்று மார்க்ஸியம் வலியுறுத்துகிறது.

அது மட்டுமன்று. பகுத்தறிவு, அன்பு, தேசிய ஒற்றுமை, அஹிம்சை, கடவுளருள், விதி முதலிய உயர் கருத்துக்களை நம்பியோ, ஆட்சியாளர் தயவை விரும்பியோ, இயற்கை மாறுபாட்டை எதிர்பார்த்தோ உழைப்பு வகுப்பு ஏமாறக்கூடாது. ஏனெனில் மார்க்ஸ் கூறுகிறபடி "கருத்துக்களது வளர்ச்சி தளர்ச்சிகளின் வரலாறு நமக்குக் காட்டும் படிப்பினை, புறப்பொருள் சூழல்களைக் கருத்துக்கள் இயக்குகின்றன என்பதன்று; கருத்துக்களைப் புற உலகச் சூழல்கள் உருவாக்கி இயக்குகின்றன" என்பதே.

மார்க்ஸுக்கு முன்னும் பல வரலாற்றாசிரியர் பொருண்மை வாத அடிப்படையில் வகுப்புப் போராட்டங்களைக் குறிப்பிட்டதுண்டு. அவர்களுக்கும் தமக்கும் உள்ள வேறுபாட்டை அவர் 1852-ல் கீழ் வருமாறு குறிக்கிறார்: "நடுத்தர வகுப்பு வரலாற்றாசிரியர்கள் முன்பே வகுப்புப் போராட்ட வளர்ச்சி பற்றி எழுதியதுண்டு. அவர்கள் கூறியவை கடந்து நான் வற்புறுத்தும் செய்திகள் உண்டு. (1) இன்றைய வகுப்புக்கள் சில பொருள் உற்பத்தி முறைகளுடன் பிணைக்கப் பெற்றுள்ளன. (2) வகுப்புப் போராட்டம் கட்டாயமாக உழைப்பு வகுப்பின் வல்லாட்சிக்கு வழி வகுத்துத் தீரும். (3) இவ்வல்லாட்சி நிலையானதன்று. வகுப்பு ஒழிப்பு, புதிய சுதந்திரம் சரிசம சமூக அமைப்பு ஆகியவை ஏற்படுவதற்கான மாறுதற்காலச் சின்னம் மட்டுமே."

பொதுவுடைமைத் தத்துவம் உண்மையான குடியாட்சிக்கு மாறானதல்ல. ஆனால் முதலாளித்துவ சமூகத்தின் குடியாட்சி போலியானது, இரண்டகமானது. லெனின் கூறுவதாவது: "இன்றைய குடியாட்சி முதலாளித்துவச் சுரண்டல் கோட்டையின் குறுகிய மதில்களுக்குள் சிறைப்பட்டுள்ளது. அது உண்மையில் ஒரு சிறுபான்மையின் குடியாட்சி; செல்வர் வகுப்புக்கு மட்டுமே உரிய குடியாட்சி. முதலாளித்துவக் குடியாட்சி பண்டைய கிரேக்கக் குடியரசுகள் காலத்திலிருந்து உருவத்தில் மாறியிருக்கிறதே தவிர, பண்பில் மாறவில்லை. அது இன்னும் அடிமைகளை ஆளும் ஆண்டான்களின் குடியாட்சியே. தற்காலக் 'கூலி அடிமை'களுக்கு உடைமை உரிமை இல்லாதபோது, அதைக் காக்கும் உரிமை இருந்து என்ன பயன்? அதற்கு அவர்களுக்கு நேரமோ, ஆற்றலோ தான் ஏது? இந்நிலையில் மக்களில் பெரும்பாலோரின் இன்றைய குடியாட்சி உரிமை, வாயைக் கட்டிப் பாட விட்ட உரிமையாகவே இயங்குகிறது."............

[இந்தக் கட்டுரையின் தொடர்ச்சியை அடுத்த பக்கத்தில் இரண்டாவது காலத்தில் இரண்டாவது பாராவில் தொடங்கும் 'குடியாட்சியின்' என்பதிலிருந்து படிக்கவேண்டுகிறோம்.]

லாஸ்கியின் பொது உடைமை

— 10 ம் பக்கத் தொடர்ச்சி —

கருதினர். மார்க்ஸ் அவ்வாற்றலை ஒரு புற ஆற்றல் என்றேகருதினார்.

உலகை இயக்கும் ஆற்றல் உலகு கடந்த ஓர் அக ஆற்றலன்று; உலகிலேயே உள்ள புற ஆற்றல்கள் தான் என்பது பொருண்மை வாதம் (மெட்டீரியலிசம்). இதன்படி உயிர்ப்பண்புகள், மனிதன் எண்ணங்கள், கருத்துக்கள், செயல்கள் ஆகியவற்றால் உலகம் நடைபெறவில்லை. உலகின் சூழல் காரணமாகவே அவை எழுகின்றன. வரலாற்றை விளக்க ஹெகெல் பொருண்மை வாதத்தை முன்பே பயன்படுத்தியதுண்டு. சமூகப் பண்புகளை நில இயற்கூறுகளின் விளைவுகளாகக் காட்டவும், நிகழ்ச்சிகளைச் சமூகப் பண்புகளின் விளைவுகளாகக் காட்டவும் அவர் முயன்றதுண்டு. ஆனால் மார்க்ஸ் அவர் முடிவுகளை ஏற்காமல், அவர் முறையைப் பயன்படுத்திப் புது விளக்கங் கண்டார்.

புற உலகின் சூழல்களும், அவற்றால் ஏற்பட்ட அனுபவங்களுந்தான் மனிதன் கருத்துகளை இயக்குகின்றன என்பதை ஆராய்ச்சியில்லாமலே எவரும் ஏற்றுக்கொள்வர். ஆனால் மார்க்ஸ் இந்நிலை கடந்து ஒருபடி மேற்சென்றார். பொதுக் கூறுகளிடையே ஒவ்வொரு காலத்திலும் மற்றெல்லாக் கூறுகளையும்விட மனித சமூகத்தை உருவாக்கும் முனைத்த கூறு பொருள்களின் உற்பத்தி முறையே எள்று அவர் கொண்டார். இவ்வுற்பத்தி ஆற்றலே சில சமூக சக்திகளை இயக்கி, அவற்றின் மூலமாக அவ்வக்கால சமூக அமைப்புக்களையும் கருத்துக்களையும் உண்டு பண்ணுகின்றது. அவையே ஒழுக்க முறைகள் என்றும், அரசியல் முறை என்றும், சமய விதிகள் என்றும் வழங்குகின்றன. மார்க்ஸின் மொழிப்படி, "மனிதர்கள் தம் வரலாற்றைத் தாமே ஆக்குகின்றனர் என்பது உண்மைதான். ஆனால் அவ்வேலையை அவர்கள் தாமே தம்மிச்சைப்படி தேர்ந்தெடுத்துக்கொண்ட சூழலிடையே செய்யமுடியாது. ஏற்கனவே அமைந்துவிட்ட சூழலிடையேதான் செய்யவேண்டும்."

மார்க்ஸின் இவ்விளக்கம் மறுக்கக் கூடியதன்று. எடுத்துக்காட்டாக, நிலப் பண்ணையாட்சி முறை சமூகத்திலுள்ள அமைப்புக்கள் யாவும், சமூகத் தொடர்புகள் யாவும், நிலப்பண்ணை ஆட்சியாளர்களின் நலன்களுக்கேற்ப உருப்படுத்தப் பட்டிருந்தன. சமத்துவப் பேச்சுப் பேசிய சமயத் துறைகூட அதற்கு எளிதில் வளைந்து கொடுத்து அதன் படிமுறை உரிமைகளை ஏற்றுக் கொண்டது. இவ்விடைக்கால சமூக அமைப்புக் குலையும்போது அரசியலும் குலைந்து, நடுத்தர வகுப்பாட்சி அரசியல் ஏற்பட்டது. புதிய ஆட்சியுடன் பழைய சட்டங்கள், அமைப்புக்கள், கருத்துக்கள் யாவும் மாறின. எங்கும் கூட்டுறவினிடமாகத் தனி மனிதனுரிமை வற்புறுத்தப்பட்டது. சமயத்துறையில் இதுவே உரோமத் திருத் தந்தை (போப்) ஆட்சியினிடமாகப் புதிய சீர்திருத்த சமயத்தை வளர்த்தது. புதிய சமூக ஆட்சிக்குத் தடங்கலாயிருந்த இடைக்காலக் கடுங்கோலர் (வல்லரசர்)கூடத் தூக்கி எறியப் பட்டனர்.

ஒவ்வொரு வரலாற்றுக்காலச் சமூக அமைப்புக்கு மட்டும் மார்க்ஸின் பொருண்மை வாதம் விளக்கந் தரவில்லை. காலாகால மாறுபாடுகளையும் அது இம்முறையிலேயே விளக்கிற்று. புற உலகச் சூழல்கள் என்றும் நிலையாயிருப்பதில்லை. புதிய விற்பனைக் களங்கள், புதிய தொழில் முறைகள், புதிய மூலப்பொருள் வளங்கள் தோற்றுகின்றன. புதிய அமைப்பு முறைகள் எழுகின்றன. இவற்றின்மூலம் பழைய அடிப்படை அமைதி காலங் கடந்ததாகிவிடுகிறது. மாறுதல் சக்தி நீக்க முடியாத கட்டாய வலு அடைகிறது. அதன் ஆற்றலால்வகுப்புக்கு உடைமை உரிமை இல்லாதபோது, அதைக் காக்கும் உரிமை இருந்து என்ன பயன்? அதற்கு அவர்களுக்கு நேரமோ, ஆற்றலோதான் ஏது? இந்நிலையில் மக்களில் பெரும்பாலோரின் இன்றைய குடியாட்சி உரிமை, வாயைக் கட்டிப் பாடவிட்ட உரிமையாகவே இயங்குகிறது."

குடியாட்சியின் போலித்தனத்துக்கு இரு கூர்கள் உண்டு. ஒன்று: பொருளியல் சமத்துவம் இல்லாத அரசியல் சமத்துவம் தந்து, அது மக்களைக் கேலி செய்கிறது. (இது கைகால்களைக் கட்டிவிட்டு 'ஓடு' என்று அடிப்பது போன்றது.) முதலாளித்துவம் மக்களிடையே அடிமை நிலையையும் அடிமை மனப்பான்மையையும் வளர்த்துவிட்டு, விடுதலை வேதாந்தம் அளக்கிறது. இரண்டாவது இந்த விடுதலை வேதாந்தம்கூட முதலாளித்துவ அடிப்படைக்கு இடையூறு ஏற்படாதிருக்கும் வரைத்தான். அது பேசும் அமைதியான வளர்ச்சி முறையும் (Evolution) அதுவரைத்தான். அவ்விடையூறு வரும் என்ற வாடை தட்டினது முதலே, சட்டமாகிய நகங்கள், அடக்கு முறையாகிய கோறைப் பற்கள், எதிர் புரட்சிப் போர் ஆகிய அழிவு நடவடிக்கைகள் தோன்றிவிடும்!

"இங்கிலாந்திலுள்ள மக்கள் மட்டும் எப்போதும் இம்சையை வெறுத்து, அமைதியைப் போற்றிப் பேணி வந்திருந்தால், இந்நாட்டில் மக்கள் சுதந்தரங்களை என்றும் பெற்றிருக்கவே முடியாது" என்கிறார் கிளாட்ஸ்டன். இன்றைய முதலாளித்துவ சமூகத்தில் ஆட்சியாளருள் இடம்பெற்ற நடுத்தர வகுப்பினரே தம் உரிமைகளைப் பெரும்போரிட்டுப் பெற்றார்களென்றால், உரிமைக்காகச் சரிசம நிலையில் போட்டியிடும் வலுவுமற்ற உழைப்பாளி வகுப்பார், போராட்டமில்லாமல், அமைதியுடன் எப்படி தம் உரிமையைப் பெறமுடியும்? நடுத்தர வகுப்பினர் பிரிட்டனில் 1642-ல் உள்நாட்டுப் போரையும், பிரான்ஸில் 1789-ல் புரட்சியையும் நடத்தி உரிமை பெற்றது போல், உழைப்பு வகுப்பும் உலகெங்கும் போராட்டம் நடத்தியே உரிமைபெற முடியும் என்பது கூறாமலே அமையும்.

மார்க்ஸியத்தின் குறைபாடு ஒன்றே ஒன்றுதான். புரட்சி கட்டாயமாக வந்து தீரும்; பொதுவுடைமை கட்டாயமாக நடந்து தீரும். என்று மார்க்ஸ் கூறுவது நடைமுறைக்கு முற்றிலும் பொருத்தமன்று. வகுப்புப் போராட்டம் நாஜியர் கட்சி போன்ற முதலாளித்துவச் சார்பான நடுத்தர வகுப்பு வல்லாட்சிக்கோ அல்லது முதலாளித்துவ ஆட்சியாளரின் முன்னெச்சரிக்கையான சீர்திருத்தங்களுக்கோ வழி வகுக்கக் கூடும். ஆயினும் இந்நம்பிக்கை, வெற்றிக்கு முயல்பவர் ஊக்கத்துக்கு அவசியம் என்பதில் தடையில்லை.

★★

தலையைக் கொய்தாள்!

மாலை நேரம். சூரியன் மேற்கே நகர்ந்துகொண்டு இருந்தான். புரூஸின் குதிரை மட்டும் பாஞ்சாலங்குறிச்சியைக் கடந்து கிழக்கே போய்க்கொண்டிருந்தது. சூரிய வெளிச்சமே புகாத தோப்பு ஒன்று, அதற்குள் புகுந்தான் புரூஸ். கண்களை மட்டும் மூடிக்கொண்டு கருத்தை எங்கோ செலுத்தியவாறு ஒரு உருவம் மட்டும் அந்த மரத்தடியில் இருந்தது அவன் கண்களுக்குப் பட்டது.

ஆண்டிகளை முன்பின் அறியாத வெள்ளைத் தளகர்த்தனுக்கு ஆச்சரியத்தையும் அருவருப்பையும் உண்டாக்கியது. கண் விழித்தான் யோகி. சுண்ணப்பொடி கலந்தாற்போல ஒரு சிரிப்பு சிரித்தான்.

"யாரப்பா நீ! என்னைத் தெரியவில்லையா உனக்கு! கனியைத் தின்று காலத்தை ஓட்டும் ஒரு காட்டு மனிதன். என்னைப் போன்றவர்களைப் பற்றி யாருமே கவலைப்பட்டது கிடையாது. உனக்கேன் சிரமம்" என்றான் யோகி.

"என்னை அறியாமல் உளறுகிறாய். என் கோபத்திற்கு நீ ஒரு கொசு. உன்னை இங்கு திரியும் காட்டு மிருகங்களுக்கு உணவாகப் போடுகிறேன் பார்" என்று கோபாவேசம் பொங்கப் பேசி அலையென ஆர்ப்பரித்தான் தளபதி. அவனுடைய கர்ஜனையில் மரத்தில் பதுங்கி இருந்த பறவைகள் கீச்சிட்டுப் பறக்க ஆரம்பித்தன.

புரூஸின் பெயரைக் கூறினால் புலி என்று எண்ணி கிலி பிடித்து ஓடும் மக்கள் கூட்டத்தைக் கண்டு இருக்கிறான். அவன் பாதம் படாத பாளையமே கிடையாது. பயந்து சாகும் பாளையங்களைப் பார்த்துப்பார்த்து ஆனந்தப்படும் கண்களுக்கு எதிர்நின்று, அதுவும் துணிவாகப் பேசும் வேடிக்கை மனிதனைப் பார்த்ததும் ஒன்றும் புரியாமல் திகைத்தான் புரூஸ். யோகியின் அருகில் அமர்ந்து உற்று நோக்கினான். ஆண்டியின் எடுப்பான மூக்கு புரூஸின் உள்ளத்தைக் குத்தியது. மின்னிய உடம்பு அவன் உடலை ஓர் உணர்ச்சி வெள்ளத்தில் புரட்டி எடுத்தது. மெல்லிய பாதம் மடக்கி அமர்ந்திருந்த காட்சி பாம்பு வளைந்திருப்பது போன்ற காட்சியாகப் பட்டது அவன் கண்களுக்கு. புரூஸ் அதிகார பலத்தால், எதையும் செய்யலாம்; ஆகவேதான் அந்தச் சுவைதட்டியது. விருந்தின் வாடை வீசியது. ஒருக்கால் இதைப் போன்ற விசித்திர ஜீவன்களுக்கே பெண்மைக்குரிய குணங்கள்தான் உண்டா? என்று சிந்தனை தெளிவில்லாமல் குழப்பிக்கொண்டே இருந்தான் தளபதி. அப்பொழுது வேகமாக எழுந்தான் யோகி. வேகத்தின் அதிர்ச்சியில் சடைமுடி தளர்ந்து விழுந்தது. மின்னும் மேனியுடைய இளமங்கை அவள்!

புரூஸின் கருத்துக்கள் சிதறின. சித்தம் குலைந்தது. மது உண்ட மந்தியானான். மலரின் தேனையுண்டு தெவிட்டா இன்பம் பெற வண்டாக மாற, புழுவாய்த் துடித்தான்.

"உனக்கேன் இக்காடு. நாடே போற்றும் என்னுடன் வந்துவிடு. பாளையக்காரர்கள் உனக்கு பாதம்தாங்குவார்கள். ஆங்கிலேயர்கள் ஆலவட்டம் போடுவார்கள்..." என்று சரளமாகப் பேசிக்கொண்டே தோளில் இருந்த துப்பாக்கியைக் கீழே வைத்துவிட்டு **முத்துவடிவின்** கைகளைப் பிடிக்க நெருங்கினான் புரூஸ். சாகஸம் பலித்தது. தான் கொண்ட சபதம் வெற்றி விளிம்பில் நின்று நர்த்தனம் செய்துகொண்டு இருப்பதை எண்ணியெண்ணி ஆனந்தப்பட்டாள். வெட்கமும் வேதனையும் கொண்ட காரிகையைப் போலச் சற்று நகர்ந்தாள் அவள். ஆர்வ மிகுதியால் அவனும் நகர்ந்தான். சட்டெனக் கையைப் பிடிக்குமுன்பு கீழேஇருந்த துப்பாக்கியை எடுத்துக்கொண்டாள் முத்துவடிவு. வெற்றிச் சிரிப்புச் சிரித்தாள். வேதனைப் புகையைப் போக்கிவிட்டு வாய்விட்டுச் சிரித்தாள். புரியாமல் திகைத்தான் புரூஸ். "துப்பாக்கியைக் கொடுத்துவிடு. இன்பத்தின் இடையூறு. பாபத்தின் கலங்கரை விளக்கம். நமக்கு இப்போது வேண்டாம்" என்றான். மறுத்தாள். நெருங்கினான். மார்புக்கு நேராகத் துப்பாக்கியை நீட்டினாள். மண்டியிட்டான்; மன்றாடினான். மனம் திரும்பவில்லை; கெஞ்சினான். வஞ்சியின் உள்ளத்திலிருந்து வெஞ்சினம் வெளிப்பட்டது.

"வாய் பொத்திக்கிடக்கும் பாளையக்காரர்களைக் கண்டு இலேசாக எண்ணிவிட்டாய். நான் யார் தெரியுமா? பானர்மென்னால் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டு இறந்தாரே மல்லு, அவருடைய புதல்வி மோகனம். இல்லை! இல்லை!! மோகனமுத்துவடிவு. நாட்டைக் காட்டிக் கொடுத்தனர் அந்த நயவஞ்சகர்கள். பயன்! கட்டபொம்மன் கயத்தாற்றில் தொங்க, பாஞ்சாலங்குறிச்சி மக்கள் பரிதவிக்க; நான் தந்தையைக் கொன்ற பழியைத் தீர்க்க முன்வந்தேன். என் எண்ணம் ஈடேறியது என்று கூறிக்கொண்டே இருந்தாள் முத்துவடிவு. டுமீல் என்ற சப்தம் அந்த கானகத்தையே உலுக்கியது. குண்டு புரூஸின் நெஞ்சை ஊடுருவி, குண்டுமணி உதிர்வது போல குருதி கொட்ட வீழ்ந்தான் புரூஸ். ரத்த வாடை கண்ட குதிரை வெறித்து செடி கொடிகளை முறித்து ஓட்டம் பிடித்தது.

முத்துவடிவு நிதானம் இழக்கவில்லை. புரூஸின் உடலைப் பார்த்தாள். பக்கத்திலே பார்த்துக்கொண்டு இருந்த பனைமரம் தலையை அசைத்து ஆனந்தப்படுவது போலக் காணப்பட்டது. அந்த மரத்தின் மட்டையின் கருக்கை பிய்த்தெடுத்து புரூஸின் தலையைத் துண்டித்தாள். ஒரு கையில் துப்பாக்கி. மறு கையில் பனங் கருக்கில் சொருகிய புரூஸின் தலை—அமைதியுற்ற பாஞ்சாலங்குறிச்சி வீதிக்குள் புகுந்தாள்.

—லெ. சந்தனம்.

இது எட்டுத் தொகை!

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு முதலியவை எட்டுத் தொகை நூல்களாகும்.

★

பதினெண்கீழ்க் கணக்கு

பதினெண்கீழ்க் கணக்கு என்று வழங்கப்படும் நூல்களாவன :—1. நாலடியார், 2. நான்மணிக் கடிகை, 3. இன்னா நாற்பது, 4. இனியவை நாற்பது, 5. கார் நாற்பது, 6. களவழி நாற்பது, 7. ஐந்திணையைம்பது, 8. ஐந்திணையெழுபது, 9. திணைமொழியைம்பது, 10. திணைமாலை நூற்றைம்பது, 11. நூற்றைம்பது, 12. திருக்குறள், 13. திரிகடுகம், 14. ஆசாரக்கோவை, 15. பழமொழி, 16. சிறுபஞ்ச மூலம், 17. முதுமொழிக் காஞ்சி, 18. ஏலாதி என்பனவாம்.

இப்பதினெட்டில் திணையைப் பற்றிய நூல் ஒன்று இருத்தல் வேண்டும். அதன் பெயர் தெரியவில்லை என அபிதான சிந்தாமணி ஆசிரியர் கூறுகிறார்.

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

போன்ற கவிஞர்களுக்கு, இது தன்னை உணர்த்தும் சொல்.—எல்லோர்க்கும் இந்த வார்த்தை, பயத்தைப் போக்கும்!

"புவியனைத்தும் போற்றிட
வான் புகழ் படைத்துத்
தமிழ் மொழியைப் புகழில்
ஏற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக்கில்லை
என்னும்
வசை என்னால் கழிந்ததன்றே!"

—என்றான் பாரதி. 'கவியரசர் தமிழ்நாட்டுக்கு இல்லை என்றார்கள்; இதோ! நான் வந்துவிட்டேன்!" என்று மார் தட்டுகிறான். இது தலைக்கனமல்ல; அகங்காரமல்ல; தன்னம்பிக்கை-இதுவே நன்னம்பிக்கை!

நம்பிக்கையில் வாழமுடியும்; சாவு ஓடும்—தற்கொலை நினைவு வராது!

தற்கொலை வரை துணியும் கோழைகள் தொலையட்டும். தினசரி சாகும் கோழைகள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் பூபாளத்தில் முகாரியை இழைய விட்டுக் கொண்டே படுக்கையை விட்டு எழுகிறார்கள். அவர்கள் வாழ்வு பூராவும் முகாரியும், சகானாவும், நாத நாமக்கிரியையும் தான் பின்னணி இசை. எதிலும் பயம்; எதிலும் ஐயம்! மனித நடமாட்டமே இல்லாத இடத்தில் ஓடிப் போய் வாழமாட்டோமா என்ற ஏக்கம். அடிவானத்துக்கு அப்பாலே சிந்தனை. பூனையைக் கண்டால் விலகி நடப்போர் புலியைக் கண்டால் என்ன ஆவார்கள்!

சிப்பாயைக் கண்டஞ்சுவார்-ஊர்ச்
சேவகன் வருதல்கண்டு பதை
பதைப்பார்.
அப்பால் எவனோ செல்வான்—
அவன்
ஆடையைக்கண்டு பயந்தெழுந்து
நிற்பார்.

—இவர்கள் ஏன் பிறந்தார்கள்? பிறந்த உயிரெலாம் இவர்கள் போலிருந்தால், வெற்றி எங்ஙனம் கிட்டும், உலகுக்கு!

மனதி லுறுதி வேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்.

—இதுவும் பாரதி சொன்னது!

"அது வேண்டும்; இது வேண்டும்; ஆசைப்படு! அதை அடைய முயற்சி செய்! ஆசையை நீக்குவது பேதமை; அதனிலும் அதை அடையக் குறுக்கு வழி செல்வது பெரும் பேதமை—ஆசைப்படு! நேர்வழியில் அதைப் பெற்றுவிடு. கிடைக்கவில்லையேல் தளராதே! மீண்டும் ஏறு, முன்னேறு!

தளராதே! தளராதே! தளராதே!

அயோக்கியனெல்லாம், முதலாளியாக மாடிமேல் மாடி கட்டி மஞ்சத்திலிருந்து கொஞ்சிக் குலவுகிறான்—நீ ஏன் நடுங்குகிறாய்? கால் கைகளை உதறி விட்டுக்கொண்டு நட!

பாரதி இதைத்தான் சொல்கிறான்.

புரட்சிக் கவிஞர் அதைத்தான் வலியுறுத்துகிறார்!

"எடுத்த காரியம் யாவினும்
வெற்றி!"
"எண்ணும் எண்ணங்கள்
யாவினும் வெற்றி!"

—என எக்காளமிடும் நிலைக்கு வா!

உலகத்திலிருப்பவர்களெல்லாம் அசகாயசூரர்கள் மாதிரியும், நீ மட்டும் கையாலாகாதவன் மாதிரியும் ஏன் நினைத்துக் கொள்கிறாய்?

தவறே புரியாத மனிதர்கள் தான் உலகில் வாழ்வது போலவும், நீயே தவறு புரிந்துவிட்டதாகவும சஞ்சலப்படுகிறாய்?

"தம்மின் மெலியாரை நோக்கித்
தமதுடைமை
அம்மா பெரிதென்றக மகிழ்க!"

—பின், தொடர்க! வலிமை பெறுக!

தற்கொலைக்கு முயன்ற கிளைவ் மடிந்தே போயிருந்தானென்றால், இந்தியாக்கண்டத்தில் இரு நூறு ஆண்டுகள் ஆங்கிலேயன் வாழ்ந்திருக்க முடியுமா? எண்ணிப்பார்!—நிற்க.

★

எனக்கு ஒருவரைத் தெரியும். கவலையே இல்லாத மனிதர். கடன் இருக்கும் ஏராளமாக. இருந்தாலென்ன? அவர் சொல்வார்: "கடன் இருக்கிறது. கையிலே பணமில்லை. இருந்தால் இல்லை என்கிறேனா? உண்மையில் இல்லை. என்ன செய்ய? கோர்ட்டுக்குப் போகிறாயா போ! என்னிடம் தான் பணமில்லையே!"

—இவர் மனிதர். பணம் வந்தால், படபடவெனக் கடனைக் கொடுத்து விடுவார். இல்லையென்றால், இல்லைதான்! அதற்காகத் துளியும் கலங்கமாட்டார். எப்போதும் உற்சாகம்! உல்லாசம்! வாழ்க்கை இவருக்குத் தேன்.

இன்னொரு மாணவர். பல முறை பரீட்சையில் 'கோட்' அடித்தவர். இவர் ஒரு வகுப்பில்தான் இருப்பார். அந்த வகுப்புக்கு மாணவர்கள் ஆண்டுதோறும் புதிது புதிதாக வருவார்கள்!—'புதிய புதிய நண்பர்கள்! ஆகா! தோல்வியில்தான் எவ்வளவு நண்பர்கள் கிடைக்கிறார்கள்!" — என்பார். கவலையா? சிச்சீ! அது ஏது! தோல்வியிலும் ஒரு மகிழ்ச்சி. அதனால் அவர் ஒன்றுக்கும் உதவாமல் போனாரா? இல்லை. இப்போது பெருந்தொழில் நடத்துகிறார்; முதலாளியாகி விட்டார்!

வாழ்க்கை என்னும் குளத்திற்கு, வாய்க்கால் ஒன்றல்ல; கோடி!

மற்றொருவர்! மிகவும் பக்குவப்பட்ட மனிதர். நல்ல இதயம்; களங்கம் அவர் கண்டறியாத ஒன்று. தொல்லைகளைச் சிரித்துக் கொண்டே பொறுப்பார். திடீரென்று ஒருநாள்......சில கடன்காரர்கள் அவர் வீட்டுக்கு 'ஜப்தி' கொண்டு வந்தார்கள். அவர் வாசலில் உட்கார்ந்திருந்தார்; வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார்.

"என்ன விஷயம்?" என்றார்.

"அட்டாச்மெண்ட்" கொண்டு வந்திருக்கிறோம்" என்றார்கள்.

உடனே அவர் முகம் மலர்ந்தது!

"அப்படியா? வெரிகுட்! எனக்கும் உங்களுக்கும் ரொம்ப அட்டாச்மெண்ட் தான்! வீட்டைக் காலி பண்ணணுமா? ஓ! செய்றேனே! உக்காருங்க. வெத்தலை போடுங்க. காபி சாப்பிடுறீங்களா?" என்றார். வந்தவர்கள் முகம் கருத்தது; அவர்கள் கண்களில் நீர் வழிந்தது.

நான் அப்போது அங்கு இருந்தேன். திகைத்துப் போனேன்.

"என்னங்க இது. இதுலெ கூட வெளையாடுறீங்க!" என்றேன்.

"பின்னே என்ன பண்றது! வர்றது வந்தாச்சு. அழுதாப் போயிடுமா? வரட்டும். தலைக்கு மேல் வெள்ளம்; சாணென்ன, முழமென்ன! கட்டுறவனுக்கு ஒரு வீடு; கட்டாதவனுக்குப் பல வீடு. ஊருலெ வீடா இல்லெ. ஜாலியாக் குடி இருந்துட்டுப் போவோம்! என்ன எழவு; வீடு கட்டிக்கிட்டா பொறந்தோம்?"—இப்படி வேதாந்தம் பேசினார்; உண்மையில் முழுசாகச் சிரித்தார்! பிறகு, வந்தவர்கள் தாங்களாகவே சமாதானம் செய்துகொண்டு போனார்கள்.

—இதுதான் இன்பப் பாதை அமைத்துத் தரும் வாழ்வு. சும்மா, இஞ்சி தின்ற குரங்கு மாதிரி முகஞ் சுளிப்பதில் பயனில்லை. ஒன்று, நடந்துதான் தீருமென்னும் நிலையில் அதை நடக்கவிட்டு வேடிக்கை பார்ப்பதுதான் பக்குவப்பட்ட மனதுக்கு அடையாளம்.

மானம்—இது ஒன்றைத்தவிர, பாக்கி எதற்கும் பயப்படுவது பேதமை! தற்கொலை — முழு மடைமை! ★

நவம்பர் முதல் வாரத்தில்
வெளிவருகிறது

முல்லை
இலக்கியத் திங்களிதழ்
ஆசிரியர் :-
கண்ணதாசன்
விலை அணா 4
முல்லை : : சென்னை-6.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.